# தொண்டன்

ஆரம்பம்: 1969 - பெப்ரவரி

புலரட்டும் பொழுது
பொங்கட்டும் புது வாழ்வு





டிசம்பர் - 2005 ஜனவரி - 2006

15/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

டிசம்பர் - 2005 ஜனவரி - 2006

மலர் - 37 இதழ் - 08

ஆசிரியர்
J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்கள்
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
ஸ்ரான்லி பிரபாகரன்

வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/ மட். மறை மாவட்டம்

முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு

SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486

விலை - 15/=
ஆண்டு சந்தா : 250/=
ஆறுமாதச் சந்தா : 130/=
(தபாற்செலவு உட்பட)

## உள்ளே


| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| சிசுபாலன் சிரிப்பதும் ஏன் | - | 02 |
| நம்பிக்கை தரும் இயேசுவின்... | - | 03 |
| இயேசு என் உள்ளத்துள் ... | - | 04 |
| ஒன்றாய் இருப்பார்களாக... | - | 06 |
| விடிவு | - | 07 |
| நிலையான சமாதானம்... | - | 09 |
| இலக்கிய மஞ்சரி | - | 10 |
| மறை அறிவை வளர்ப்போம் | - | 12 |
| கிறிஸ்துவின் பிறப்பு... | - | 14 |
| தொண்டனில் சில நிமிடங்கள் | - | 15 |
| பண்பாட்டு மயமாக்கல்... | - | 17 |
| மாணவர் பக்கம் | - | 20 |
| மருத்துவக் குறிப்பு | - | 21 |
| வன்முறையற்ற.... | - | 22 |
| மனக்கோலம் | - | 25 |
| விவிலியம் கற்போம் | - | 27 |
| பரிசுப்போட்டி | - | 28 |


தொண்டன் வாசகர்கள், எழுத்தாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் நத்தார், புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

பூத்துக் குலுங்க இருக்கும்
புதுவருடத்தை நெருங்கவிருக்கும் வேளை
புதுப்புது நிகழ்வுகள்- அரங்கேறுவதை
அவதானிக்கிறோம்.
அரசின் புதிய தலைவரது புதிய யோசனைகள்
வெளியாகிய அதேவேளையில்
மாவீரர் தின உரையில்
அறிவிக்கப்பட்ட சில அம்சங்களும்
புதிய நம்பிக்கையை
தருவதாக அமைந்துள்ளன.
போர் என்ற போக்கிலே போகாமல்,
பொறுத்திருந்து பார்ப்போம் என்ற
நிலைப்பாடுகளும்,
சமாதானமே எனது முதல் குறிக்கோள்
என்று வெளியிடப்பட்ட அறிக்கைகளும்
புதிய ஒளிமயமான எதிர்காலத்தின்
ஒளிக்கீற்றுக்களாகத் தென்படுகின்றன.
கடந்த காலத்தில் கற்றுக் கொண்ட பாடங்களைக்
கவனத்தில் கொண்டு
இனப்பிரச்சினைப் பேச்சுவார்த்தையில்
ஈடுபடுகின்ற இரு தரப்பினரும்,
அவதானத்துடனும், புரிந்துணர்வுடனும்
காய்களை நகர்த்துவார்கள் என்ற
எதிர்பார்ப்புடன் இருக்கிறார்கள் மக்கள்.
இழுபறிகள் இல்லாமல்
காலங்களைக் கடத்தாமல்
கண்ணியமான தீர்வுகள் கிடைத்தால்
மீண்டும் இலங்கை- ஓர்
'அழகாபுரியாக' மாறும் என்பதில் ஐயமில்லை.
இவையனைத்திற்கும்
நல்ல மனங்களும், சமாதான உள்ளங்களும்
அவசியம் தேவைப்படுகின்றன.
இந்தச் சமாதானம்
தெய்வத்தின் ஓர் ஆசீராக
நமது நாட்டிற்குக் கிடைக்க வேண்டும்.
அந்தச் சமாதானத்தின் யேசு
அமைதியின் மன்னர்,
சமாதானத்தின் வேந்தர்.
அவரது அரசில்
'...... கன்றும், சிங்கக்குட்டியும்,
கொழுத்த காளையும் கூடி வாழும்......
பசுவும், கரடியும் ஒன்றாய் மேயும்.........'
(எசாயா11:6,7)

ஏனென்றால்.
இறைமகன் இயேசுவின் அரசில்
'பகைவர்கள் தங்கள் வாள்களைக்
கலப்பைக் கொளுக்களாகவும்.........
ஓர் இனத்திற்கு எதிராக, மற்றோர்
இனம் வாள் எடுக்காது- இனி
அவர்கள் போர்ப் பயிற்சி பெறமாட்டார்'கள்
(எசாயா 2:4)

(தொடர்ச்சி பக்கம் 13ல்)



## இறைவார்த்தை

காரிருளில் நடந்துவந்த மக்கள்
பேரொளியைக் கண்டார்கள்
சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில்
குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது

- எசாயா 9:2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிசுபாலன்

— சிறப்புக் கவிதை —

# சிரிப்பதும் ஏன்?



மார்கழிப் பெண்ணாள் மலர்ந்து
யௌவனம் சிந்தும் மனோரதியப் பொழுது!
மண்ணுக்கும், விண்ணுக்கும்,
மறுபடியும் ஓர் புனிதப் பிரகடனம் .....
மந்தை மேய்ப்பவரும், மற்றுள சாமான்யரும்
மனுமகனின் வருகையில்
பிரதான பாகம் ஏற்றிட்ட வரலாற்றுப் புரட்சி...!

கன்னித்தாயவளின் கர்ப்பம்,
மரபுச் சட்டங்களின் மன்றில், கடதாசிச் சட்டங்களால்
விசாரிக்கப்படாமல், தேவ ஏற்பாட்டின்
மௌன ஏற்புரையான பேரதிசயம்...!

எல்லாமே கனகச்சிதமாய், நிர்ணயிக்கப்பட்ட
இறை நாடகத்தின் எதார்த்த காட்சிகளாய்...!
சொல்லுக்குள் அடங்காச் சூக்குமம்
புல்லணையிற் புரண்ட போது, பிரபஞ்சமே
மெல்ல அசைந்தது .... சத்திய சாஸ்வதம் ...!
மரபுகளின் முதலாவது மீறல் -
மாடடைக் கொட்டிலில் ஆர்ப்பாட்டமின்றி,
ஏழ்மையின் குறியீடாய்ப் பிரசவம் ஆன
கணத்தில்தான் - மானுடம், தெய்வீக வரைகோட்டைத்
தீண்டிப் பார்த்தது ....
வைக்கோல் அணைமேல் - தேவ
வைரம், அன்பின் ஜீவ ஒளி பிரகாசித்த வேளையிற்றான்
வித்தியாசமான போதனை புலரலாயிற்று!

ஓ! இன்றைக்கும் இறைமகன் உதித்த நாளில்
எத்துணை குதூகலம்! கோலாகலம் ...
உற்சாகக் கொப்பளிப்பு...!
என்றாலும் ... என்றாலும் இதயத்து மூலையிற் சிறு நெருடல்!
வீட்டுக்கு வெள்ளையேற்றும் இருண்ட உள்ளங்கள்....
வார்த்தைகளில் மட்டும் வாத்ஸல்ய வாழ்த்துப்
பரிமாறும் வைர நெஞ்சங்கள்....
வனப்பாய் 'கிறிஸ்மஸ்' கொண்டாடி - உயர்
வகுப்பு அந்தஸ்துக்கு வடிகால் தேடிடும் அகங்கார மாயைகள்!
சிசுபாலன் மறுபடியும் - அதே மார்கழிப் பனியில்,
அதே வறுமைக் கோலத்தில் இன்னும் சிரிக்கிறான்!
'என் பிறப்பின் அர்த்தமதை இன்னும் புரியாத
இதயங்கள் - வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்
புல்லணைத் தத்துவம் புரிந்திடும் நாள் எதுவோ?
என்றெண்ணி இன்னமுந்தான் இறைபாலன் சிரிக்கின்றான்!

முறையூர் . ச. சசீதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவராகிய இயேசுக் கிறீஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் இக்காலத்திலே எல்லா மக்களுக்கும் அமைதியும் சமாதானமும் மகிழ்ச்சியும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகிறோம்.



கிறீஸ்துவின் பிறப்பு மானுடத்துக்கு நம்பிக்கை தருகின்ற ஒரு மாபெரும் நிகழ்வாகும். 'மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்'' என்னும் வான தூதரின் அறிவிப்பு அந்த நம்பிக்கையைப் பறைசாற்றி நிற்கின்றது. 2000 ஆண்டுகளுக்கு முன் இடையர்களுக்குக் கூறப்பட்ட இவ்வார்த்தைகள் இடையர்கள் வழியாக முழு உலகுக்குமே அறிவிக்கப்பட்ட நற்செய்தியாகும். இயேசுவின் பிறப்பு இவ்வுலக துன்பங்களைக், கவலைகளை இல்லாமல் செய்துவிடவில்லை. மாறாக அவற்றை எதிர்கொண்டு வாழுகின்ற துணிச்சலைத் தருகின்றது. ஏனெனில் அவர் நமக்காகப் பிறந்துள்ளார். அந்த 'இயேசு அனுபவம்' நமக்குப் பலத்தைத் தந்து பிரச்சினைகளைத் தீர்க்கும் மனோதிடத்தை அளிக்கிறது.

நமது நாட்டைப் பொறுத்தளவில் நம்பிக்கைகள் நலிந்து போன ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது: கடந்த காலத்தில் உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் காலப்போக்கில் வலுவிழந்து வந்துள்ளது. தற்போது எந்த நேரத்திலும் யுத்தம் வெடித்துவிடலாம் என்று அஞ்சு அளவுக்கு ஒரு முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

# நம்பிக்கை தரும் இயேசுவின் பிறப்பு

திரு/மட். மறை மாவட்ட ஆயர் பேரருள்திரு. யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள்



இதற்கு யார் காரணம் என்று ஆராய்ந்து குற்றப் பத்திரிகை வாசிப்பது தற்போதைய தேவையன்று. பரஸ்பரம் நம்பிக்கையைக் கட்டி வளர்த்து ஓர் உறுதிப்பாட்டை வளர்ப்பதே இப்போதைய அவசரத் தேவையாகும். இதற்கு அனைவரிடத்திலும் நல்ல மனம் வேண்டும். இந்த மனம்தான் அமைதியை அனுபவிக்கும் என்பதையே இயேசுவின் பிறப்பு தெரிவிக்கின்றது.

எனவே நமது பேச்சுக்கள், நடத்தைகள், அணுகு முறைகள் எல்லாம் நமது நல்ல மனதை, நல்லெண்ணத்தை வெளிக் காட்டுபவையாக இருக்க வேண்டும். ஏட்டிக்குப் போட்டியான செயல்பாடுகள் விரும்பத்தகாத விளைவுகளையே ஏற்படுத்திவிடும்.

இயேசுவின் பிறப்பு அன்பு, நீதி, நம்பிக்கை, மன்னிப்பு, தியாகம், பகிர்தல் போன்ற விழுமியங்களை நம் முன்னே வைக்கிறது. இயேசு வழங்கும் சமாதானத்தை, விடுதலையை நாம் இவற்றின் பின்னணியிலேயே விளங்கிக் கொள்ள வேண்டும். ஆகவே இயேசுவின் பிறப்பு விழாக் காலத்தில் அவரது பிறப்புக்காட்டும் வழியில் சமாதானத்தைக் காண முன்வருவோருடன் கைக்கோர்த்துக் கொள்ள கிறீஸ்தவம் எப்போதுமே தயாராக உள்ளது. ஏனெனில் 'சமாதானம் செய்வோர் பேறு பெற்றோர் அவர்கள் கடவுளின் மக்களெனப் படுவர்''.

ஆகவே அனைத்து மக்களும் ஆவலோடு எதிர்பார்க்கும் நிலையான சமாதானத்துக்காக அனைவரும் நீதியோடு செயற்பட நமக்காகப் பிறந்துள்ள குழந்தை இயேசு தமது ஆசீரை நிறைவாகப் பொழிய வேண்டுமென்று இறைஞ்சுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசு என் உள்ளத்துள் பிறக்க வேண்டும்

“ஆண்டவருடைய தூதர் அவர்கள் முன் வந்து நின்றபோது ஆண்டவரின் மாட்சி அவர்களைச் சுற்றி ஒளிர்ந்தது. மிகுந்த அச்சம் அவர்களை ஆட்கொண்டது. வானதூதர் அவர்களிடம் ‘அஞ்சாதீர்கள் இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்” (லூக் 2:9-13)



இயற்கை பொங்கினால் எழில் என்கிறோம். இல்லத்தில் பானை பொங்கினால் வளமை என்கிறோம். மண்ணில் நிலம் பொங்கினால் பசுமை என்கிறோம். விண்ணில் நிலவு பொங்கினால் குளுமை என்கிறோம். அன்பு பொங்கினால் ஆண்டவர் என்கிறோம்.

பொங்கிய ஆண்டவரின் அன்பு மாட்டுக் குடிலிலே வந்து தங்கிய நாளைத்தான் கிறிஸ்துமஸ் திரு நாளாகக் கொண்டாடுகிறோம். மானிடராகிய நம் அனைவர் மீதும் ஆண்டவர் வைத்த அன்பு இயேசுக் கிறிஸ்துவாக அவதாரம் செய்த அப் பெருநாளை குதூகலமாக கொண்டாட நாம் நம்மையே தயார் செய்து கொண்டிருக்கிறோம்.

ஆனால் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் குதூகலமெல்லாம் குடிலிலே குழந்தையாகப் பிறந்தவரைக் கடவுளாகப் பாவிப்பதிலே அடங்கும் என்பதை நாம் உணர வேண்டும். குடிலிலே வெறும் மானிடக் குழந்தையை நாம் காண்பதில்லை. ஆதியும் அந்தமுமில்லா அருட் பெருஞ்சோதியைப் பார்க்கிறோம். சோதிமணி முடிதரித்த சொற்கடந்த சுந்தரனைப் பார்க்கிறோம். அண்டங்களையெல்லாம் ஒரு பந்தெனத் தன் அகம் கைக்குள் அடக்கும் அனாதி கர்த்தனைப் பார்க்கிறோம். காலங்களை எல்லாம் இயக்குகின்ற கருணாநிதியை சூரிய சந்திரர்களைச் சுற்றிச் சூழலவிடும் சுந்தர ஜோதியைப் பார்க்கிறோம். அதாவது ஆண்டவரையே அழுகிற பாலகனில் காண்கிறோம். இயேசு கிறிஸ்துவைத் தெய்வமாக ஏற்றுக் கொள்ள கிறிஸ்தவரல்லாத அன்பர்களுக்குக் கடினமாக இருக்கலாம். ஆனால் இயேசு இறைவனாக இல்லாதிருந்தால் “என்னைப் பார்ப்பவன் என் விண்ணகத் தந்தையையே பார்கிறான்” என்று அவர் சொல்லியிருக்க மாட்டார் “விண்ணும் மண்ணும் அழியலாம் என் வார்த்தைகளில் ஒரு அச்சரமாவது அழியமாட்டாது”. என்று சொல்லியிருக்கமாட்டார்.

இயேசு இறைவனாக இருந்த காரணத்தாலேதான் ஆணின் உதவியின்றி அமலியின் வயிற்றில் உற்பவித்தார், ஐந்து அப்பங்களை ஐயாயிரமாக பலுக்கி மக்களின் பசி தீர்த்தார், அலைகடலை அமர்த்தினார், ஆரவாரித்து வந்த புயலை நிறுத்தினார், ஆழ்கடலில் அமிழ்த்தாது அடிமேல் அடி வைத்து நடந்து சென்றார், பிறவிக் குருடர் முடவருக்குக் குணமளித்தார், இறந்த வரை உயிர்ப்பித்தார், முன் உரைத்தபடி தாமே இறந்த மூன்றாம் நாள் உயிர்த்தார். ஆகவே

உலகம் பிறந்த நாள் முதலாய்-<br>
என்னுள்<br>
உயிரும் துடித்த நொடிமுதலாய்<br>
உன்னைத் தேடி அலைகிறேன்<br>
உன் உறவை நாடி ஏங்குகிறேன்,

என்று எந்தத் தெய்வத்தைக் கண்டு உறவாட மனிதன் ஆதிகாலத்திலிருந்து அங்கலாய்தானோ அதே தெய்வம்தான் மாட்டுக் குடிலிலே மனிதனாகப் பிறந்தது.

இத்தனை ஆண்டுகளாக ஆண்டவனாம் இயேசுவை மாட்டுக் குடிலில் பிறக்கவைத்து கிறிஸ்மஸ் கொண்டாடிவருகிறோம். இந்த ஆண்டவராகிய இயேசு நம் மனக்குடிலில் பிறப்பாரா? அண்மையில் ஒரு பத்திரிக்கையில் கிறிஸ்மஸ் சமயத்தில் கடவுளோடு ஒரு மனிதர் பேசும் உரையாடல் என்று ஒருவர் எழுதியிருந்தார். அந்த உரையாடலிலே மனிதர் கடவுளை நோக்கி

“தேடினேன் திக்கனைத்தும்<br>
தெண்டனிட்டேன்<br>
வாடினேன் என் மயக்கம்<br>
மாற்றாய் பராபரமே”

என்று வரம் கேட்ட மனிதருக்குக் கடவுள் மனமிரங்கி அவர் காணும் படி காட்சிதருவதாக வாக்களிக்கிறார்.

மனிதர் சுதாகரித்துக் கொண்டு கடவுளைப்பார்த்து.

“கண்ணுக்குப் புலப்படாத இறைவா! விண்ணுக்குள்ளேயே இருந்து நீ காட்சி தந்தால் போதும் அண்ணாந்து பார்த்து உன்னை ஆராதனை செய்கிறேன். அருகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிட்டால் என் அதிசயத்தைக் கண்டு ஆச்சரியப்படுவாய் என்றார். அதற்குக் கடவுள்

"இல்லை இல்லை உன் அருகில் வர இருக்கிறேன். உன்னைப்போல ஒருவராக விரும்புகிறேன். ஆகவே உலகுக்கு வந்துதான் காட்சிதர வேண்டும்" என்றார். மனிதன் விடுவதாக இல்லை. கடவுளை நோக்கி, "ஆண்டவா! மனிதனாக விழையும் உமக்கு மறுப்புச் சொல்ல நான் யார்? மண்டையில் ஒன்றுமில்லாதவன் அல்லது அரைகுறையாக வைத்திருப்பவன்! நீ விரும்புகிறபடியே வா! ஆனால் ஒரு வேண்டுகோள்! நான் ஆக்கிவைத்திருக்கிற அழகு சாதனங்களிலே வந்து பிறப்பாயாக! கண்ணைக்கவரும் வண்ண விளக்குகளிலே வந்து பிறப்பாயாக! கட்டிவைத்திருக்கும் கோயில்களிலே கோபுரங்களிலே வந்து பிறப்பாயாக! செய்துவைத்திருக்கும் சிற்பங்களிலே, சிலைகளிலே வந்து பிறப்பாயாக" என்கிறார்.

இதற்கு இறைவன்...

"இல்லை இல்லை மனிதனாக உன் மனத்திலேதான் பிறப்பேன். அப்பொழுதுதான் மாசடைந்த உன் மனத்தின் தூசைத் துடைத்துத் தூய்மைப்படுத்த முடியும். நான் உன் மனத்திலே பிறந்தால்தான் உன் குணத்தில் உள்ள நான் என்னும் ஆணவம் மாயும். பச்சைச் சுயநலத்தில் பாதியாவது குறையும் பார்க்கும் இடம் எல்லாம் பழகும் ஆட்களில் ஈசனைக் கண்டு நேசமாய் அன்பு செய்வாய்" என்கிறார்.

ஒருவர் உள்ளத்தில் இயேசு பிறக்கிறார் என்பதன் உண்மையான அடையாளம் அவர் தன்னை நேசிப்பதுபோல் தம் அயலாரையும் குறிப்பாக எளியோரை, தாழ்ந்தோரை நேசித்து அவருக்கு அன்புப் பணிபுரிவதாகும். இதற்கோர் அருமையான எடுத்துக் காட்டாக அன்னை திரேசாவைக் கொள்ளலாம்.

அன்னை தெரேசவை அத்தனை மக்களும் பூ மாலைகளாலும் புகழ் மாலைகளாலும் முத்தப் பொழிவுகளாலும் முகம் மலர்ந்த புன்னகையாலும் உபசரித்தார்களே ஏன்?

எனக்குத் தெரிந்த பதில் எல்லாம் அந்த அன்னையிடத்தில் அவள் கடவுளாக நம்பிப் பின்பற்றும் இயேசுவின் இறை உயிர் நிரம்பி வழிகிறது என்பதே!

அவள் இதயத்தில் இயேசு உண்மையாகவே பிறந்திருக்கிறார். ஆகவே அவரது அருளுயிர் அவளது அகத்தில் நிரம்பி வழிகிறது. எவ்வளவுக்கு நிரம்பியுள்ளது என்றால் அவள் அதரங்கள் அசையும்போது இயேசுவே பேசுகிறார். அவளது அன்புக் கரங்கள் தழுவும் போது இயேசுவே ஆரத் தழுவுகிறார்.

பார்க்கும் இடங்களிலும் பழகும் நபர்களிலும் பரமனைக் கண்டு பணிவிடை செய்கிறார்கள். அவனியில் வரண்ட பகுதிகளிலே வழிந்தோடி வளமையூட்டுகிறார்கள். சாக்கடைப் பகுதிகளில் புழுக்களாக நெளிவோரைத் தூக்கியெடுத்துத் துயர் துடைத்து, தூய்மைப் படுத்தி தெய்வத்துக்கு உகந்தவர்களாக்கிவிடுகிறார்.

இதற்கெல்லாம் காரணம் என்ன? இத்தகைய பிறர் நலப் பணிக்குள் சுயநலம் மறந்து எப்படி அவளால் தன்னையே அர்ப்பணிக்க முடிந்தது என்று கேட்கும் போது 'என்னை இயக்குகின்ற சக்தி இயேசுக்கிறிஸ்துவே என்று அவள் சொல்லாத இடங்களில்லை. தெருக்களிலும் சொல்லியிருக்கிறாள், தேசிய அரங்குகளிலும் சொல்லியிருக்கிறாள்.

தன்னை முழுவதும் பிறருக்கு வழங்கவே கடவுள் இயேசுவில் மனிதனானார் என்பதால் அவரது பிறப்பைக் கொண்டாடும் எல்லோரையும் அத்தகைய பிறர்நல அன்புப் பணிக்குக் கிறிஸ்மஸ் அழைக்கிறது.

இந்த அழைப்பை நினைவுபடுத்தவே "சாந்தாகிளாஸ்" கிறிஸ்மஸ் இரவில் வருகிறார். வயது முதிர்ந்து தடித்த குள்ளமான கிழவன் இந்த நல்ல நாளில் நமக்கு நல்ல பரிசுகளைக் கொண்டுவந்து தருவதாகக் கிறிஸ்தவக் குழந்தைகள் நம்புவது ஒரு கிறிஸ்மஸ் மரபு.

இந்த அழைப்பை நினைவு படுத்தவே கிறிஸ்மஸ் மரமும் மேல் நாடுகளில் கிறிஸ்மஸ் விழாச் சிறப்புகளில் ஒன்றாகக் கொள்ளப் பட்டது. மரம் எதையும் வைத்துக் கொள்வதில்லை. எல்லாவற்றையும் பிறருக்கு வழங்கிவிடுகிறது.

ஆகவே, நம்மோடு கலந்து உறவாட வந்த அந்தக் கடவுளை பிறரில் நாம் கண்டு உறவாட மனமிருக்கிறதா? துணிவு இருக்கிறதா? எல்லா மனிதரையும் ஈசன் என நம்பி நேசமாய் அவர்களை அன்பு செய்ய முன்வருவோமா?

அன்று சூசையும் மரியும் சத்திரத்தில் இடமின்றித் தத்தளித்ததை நினைக்கும்போது நெஞ்சம் குமுறுகிறதா?

நகருக்கு ஒரு பெரியவர் வருகிறார் என்றால் தெருவெல்லாம் தோரணங்கள், அடுக்கடுக்கான அலங்கார வளையங்கள் ஊரே அல்லோல கல்லோலப்படுகிறது. அதுமட்டுமன்று தெருவிலுள்ள அலங்கோலங்கள் எல்லாம் அகற்றப் படுகிறது. அசம்பாவிதங்கள் நடவாதிருக்க சந்தேகத்துக்குரிய பேர்வழிகளை, சமுக விரோத சக்திகளை பிடித்து அடைத்து வைத்து விடுவார்கள்.

அதுபோல் இறைவன் தமக்குரிய மகிமையோடு நம்மிடம் வரவேண்டுமென்றால் திருவிழாக் கொண்டாட்டமும், கெட்டிமேளமும் கொடியும் மட்டும்போதாது. நமது உள்ளத்தில் பதுங்கியிருக்கும் சந்தேகத்துக்குரிய பாவச் சார்புகளை இறைமக்கள் சமுதாயத்தின் சமூக விரோதச் சக்திகளை நாம் அப்புறப் படுத்த வேண்டும்.

அதாவது மனம் மாற வேண்டும். சுயநல நெஞ்சம் பிறர்நல நெஞ்சமாக மாறவேண்டும். இயேசு நம் மனத்தில் பிறந்திருக்கிறார் என்பதற்கு இதுவே அடையாளம்.

**○ சகோ. பிறைனர் செலர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றாய் இருப்பார்களாக!

'ஆழிப்பேரலைதான் சூழ்ந்து ஆனந்தமாய் வாழ்ந்த எம்மக்களின் உடல்களை வதைத்து உயிர்களை குடித்ததை நினைத்திட நெஞ்சம் துடிக்கின்றது. அந்த நினைவுகள் எம்மை வதைக்கின்றது'. ஆம் இந்தக் கவிதை வரிகள் நம் சிந்தனைகளையெல்லாம் ஓராண்டிற்கு முன்பு நடைபெற்ற சுனாமி அனர்த்த நினைவிற்கு இட்டுச்செல்கின்றன. இலங்கையர் எம்வாழ்வில் மறக்கமுடியாத, வடு நிறைந்த நாளின் ஓராண்டு பூர்த்தியாகியுள்ளது. கண் இமைகள் மூடித் திறப்பதற்குள் வரலாறு கண்டிராத அழிவினை நம் தேசம் கண்டு கொண்டது. விலை மதிக்கப்பெறாத ஆயிரக்கணக்கான உயிர்கள் அழிக்கப்பட்டன. பில்லியன் ரூபாய்க்கள் பெறுமதியான அரசு, மற்றும் தனியார் உடமைகள் அழிக்கப்பட்டன. மக்கள் நிர்க்கதியாக்கப்பட்டார்கள், தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. அனைத்தும் முடிந்து விட்டன என்கிற மயான அமைதி நாடு முழுவதும் தழுவிக் கொண்டது. கண்ணிமைகள் மூடித்திறப்பதற்குள் நடந்தேறிய இந்த இயற்கை அன்னையின் சீற்றத்தால் கணப்பொழுதில் பலகுழந்தைகள் அனாதைகளாக்கப்பட்டார்கள். பிள்ளைகளைப் பறிகொடுத்த பாவிகளாக பெற்றோர்கள் மாறினார்கள். உயிருக்காகப் போராடி உடல் உறுப்புக்களை இழந்து காயமடைந்தோர் உருவானார்கள். தாங்கள் சிறுகச்சிறுக சேமித்தவற்றைக் கண்ணெதிரே பறிகொடுத்த பரிதாபத்துக்குள்ளானார்கள். ஆலயங்களும், கோவில்களும், பள்ளிகளும் பாடசாலைகளும் தனியார் வீடுகளும் அகதிகள் வாழும் முகாம்களாக மாறிக்கொண்டன. கூடார வாழ்வு மீண்டும் புது வடிவம் எடுத்துக் கொண்டது.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் யாராக இருக்கமுடியும்? கடலன்னையின் சீற்றத்திற்கு ஆளானவர்கள் யார்? வடக்கில், தெற்கில் உள்ளோரா? கிழக்கில், மேற்கில் உள்ளோரா? யார்தான் தப்பித்துக்கொண்டார்கள்? பின்பு எதற்குத் தான் இந்த பிரதேசவாதம்? இறந்தவரும், இழந்தவரும் தமிழரா? சிங்களவரா? முஸ்லீம்களா? பறங்கியரா? யார்தான் விதிவிலக்கு. பின்பு எதற்கு இந்த இனவாதம்? மாண்டவரும் மடிந்தவரும் சிங்கள கட்சியைச் சார்ந்தவரா? தமிழ்க் கட்சியைச் சார்ந்தவரா? முஸ்லீம் கட்சியைச் சார்ந்தவரா? எவருமே தப்பவில்லை பின்பு எதற்குத்தான் கட்சிவாதம்? இங்கு அள்ளுண்டு போனவர்களும், அலைக்கழிக்கப்பட்டவர்களும் யார்? இந்துக்கள் மாத்திரமா? பௌத்தர்கள் மாத்திரமா? இஸ்லாமியர் மாத்திரமா? கிறிஸ்தவர்கள் மாத்திரமா? எல்லோரும்தானே அலைக்கழிக்கப்பட்டோம். பின்பு எதற்கு இங்கு மதவாதம்?


ஏனென்றால் சுனாமிக்கு வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்ற பிரதேசவாதம் தெரியவில்லை. சுனாமிக்குச் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர் என்கிற இனவாதம் தெரியவில்லை. சுனாமிக்குக் கட்சிகள் என்கிற அரசியல் தெரியவில்லை, சுனாமிக்கு இந்து, முஸ்லீம், கிறிஸ்தவம், பௌத்தம் என்கின்ற மதவாதம் தெரியவில்லை.

கடலலையின் சீற்றத்திற்கு முழு இலங்கையுமே காவு கொள்ளப்பட்டது. முழு இலங்கையுமே காவுகொள்ளப்பட்ட நாளின் ஒருவருட பூர்த்தியில் திடசங்கற்பம் பூணுவோம், முழு இலங்கையராய் எழுவோம் என்று. யோவான் 17:21 கூறுமாற் போல் 'எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக, தந்தையே நீர் என்னுள்ளும், நான் உம்முள்ளும் இருப்பது போல அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக'. இதுவே புது இலங்கையைக் கட்டியெழுப்ப தேசத்தின் சுனாமி நினைவுச் செபமாக, செயலாக மாறட்டும். இறைவன் நம் எண்ணங்களையும். செயல்களையும் ஆசீர்வதிப்பாராக.

அருள் தந்தை நவாஜி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1985ம் ஆண்டு, நவம்பர்மாதம், 15ம் திகதி நள்ளிரவு. மட்டுமா நகரின் எழில்மிகு முகத்துவார வீதியின் வேதாரண்யம் சதுக்கத்தை அண்டியபகுதி. காலையில் அப்பகுதியில் நடைபெற இருக்கும் சம்பவத்தின் பயங்கரம் தெரியாமல் அனைத்து வீடுகளும் உறக்கத்தில் ஊன்றியிருந்தன. ஜீவா மட்டும் போராடிக்கொண்டிருந்தான். செத்துவி...டு...வேன் எனப் பயமுறுத்திக் கொண்டிருந்த விளக்குக் குப்பியின் துணை கொண்டு செம்பை அடுப்பில் சூடாக்கி ஆடைகளை ஓரளவு நிமிர்த்துகிறான். உள்ளே நோயுடன் படுத்துக் கொண்டிருந்த தாய் கண்மணியின் வறட்டுக் குரல் ஜீவாவை உயிரடையச் செய்கிறது. "தம்பி....நேத்து இராத்திரிக் குழம்பு கொஞ்சமும், பழைய சோறும் இருக்குது, சாப்பிட்டுத் போ" குரலில் உயிரில்லாத தன்மை அப்படியே உறைத்தது.

"சரி....சரி நான் சாப்பிடுறன், உடம்பை பாத்துக் கொள்ளுங்கோ" என ஆறுதல் சொன்ன ஜீவாவுக்கு வாழ்விலே தான் எத்தனை கசப்புகள், தடைதாண்டல்கள். சிறுவயதில் ஈழப்போராட்டத்திற்கு தம்பியைத் தாரை வார்த்ததும், மீன் பிடித்துக் கொண்டிருந்த தகப்பனாரைப் 'புலி'யென நினைத்துப் படையினர் சுட்டுக் கொன்றதும், தாய் விடாப்பிடியாக இரவு பகல் பாராது மட்டை இழைத்து, மாவிடித்து, அப்பம் சுட்டு விற்று வந்த வாழ்வை நினைத்தாலே ஜீவாவுக்கு அடி வயிற்றில் பகீரென்றிருக்கும். இன்றுடன் இந்தப் போராட்ட வாழ்வுக்கு முற்றுப்புள்ளி போடலாமென்ற எண்ணம் பெரிய ஆறுதலைத் தந்தது. இடையில் பக்கத்துவீட்டுப் பாக்கியம் மாமி வந்து தனது தாயிடம் ஓராங் கட்டைச் சந்தியில் காட்டிக் கொடுத்த இரண்டுபேரை சுட்டுப் போட்டுக்கிடக்காம் எனச் சொன்னது கூட ஜீவாவுக்கு உறைக்கவில்லை. இதெல்லாம் இங்கே சாதாரணம் தானே என அனுப்பியது நினைவுக்கு வந்து சற்றே மனதை உறுத்தியது. புறப்படும் நேரம் வந்து தாயின் பாதத்தருகில் குனிந்து வணங்கினான். என்றும் இல்லாத பாசப்பிணைப்போடு "மகன்" எனத்தாய் கண்மணி அழைத்த அழைப்பில் பாசப்படகு விரைந்தோடி வந்தது. மகனைப் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும் என மனதினுள் எழும் உணர்வையெண்ணித் தனக்குள் தானே மெல்லிய வியப்பும் கொள்கிறாள்.

சைக்கிளை எடுத்துக் கொண்டு செல்கையில் சுடப்பட்ட அந்த இருவரையும் சனங்கள் பார்த்துவிட்டு உடன் கலைவதைக்கண்டும் காணாதவன் போன்று சென்று பஸ்பிடித்தான். பெரிய மண்டபம்தான். பல்கலைக் கழக உபவேந்தர் முதல் வட கிழக்கு ஆளுனர்வரை விருந்தினர் பட்டியலில். இதுவரை தன் வாழ்வில் நடைபெற்று முடிந்த கண்ணீரின் பாதைகளை நினைத்தபடி அமர்ந்திருந்த ஜீவாவை வாசிற்றியின் மிகச்சிறந்த பட்டதாரி ஜீவா நவரெட்ணம் அவர்களை மேடைக்கு அழைக்கிறோம்" என்ற அழைப்புக்கு கரவொலி விண்ணை முட்டியது. தொடர்ந்து பட்டதாரிகளுக்கு நடைபெற்ற விருந்திலே கலந்து கொண்டபோது மாணவரிடையே நகரையொட்டிய இடமொன்றில் ஏதோ அசம்பாவிதமெனப் பேசிக் கொள்வதைத் தொடர்ந்து அனைவரும் கூடுகளுக்கு சென்றுவிடத் துடிக்கும் பறவைக் கூட்டங்களின் மனோநிலையுடனேயே காணப்பட்டனர். விரைவாக பஸ்சேறி ஊர் எல்லையை அண்மித்தவனுக்கு இடம் யாவும் சுடுகாடாயிருப்பதைக் கண்டு பேச்சே வரமறுத்து ஊமையாகினான்.

துடிக்கும் இதயத்துடனே படலையைத் திறந்தவனுக்கு தூய வெண்ணிறப்புடவையில் தாய் கண்மணி அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தது நன்கு தெரிந்தது. நிரந்தரத் தூக்கம். நடைபெற்று முடிந்த சம்பவங்கள் யாவையும் பக்கத்துவீட்டு வடிவேலு மாமா சொல்லிக் கொண்டிருக்கும் போதே, தாய் கண்மணியின் விரல் இடுக்கில் இருந்த காகிதம் அவனை நோக்கிச் சரணடையத் துடித்தது.

நடுநடுங்கும் விரல்களால் காகிதம் பிரிக்கப்பட்டபோது வா மகன் ஜீவா, இப்ப நான் இயேசுவோட இருந்து உன்ன ஆசிர்வதிக்கிறன், மகன் எப்பிடியாவது இந்த ஏழைமக்களின் விடுதலைக்காக நீ பாடுபடவேணும். உன்னக் கஷ்டப்பட்டுப் படிக்கவைச்சதே இதுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகத்தான் உண்மைக்காகப் போராடு மகன். இந்த மக்களின்ர "விடிவு...." மேற் கொண்டு எழுதமுடியாது தவித்துப் பிரியாவிடை கொடுத்திருப்பது ஜீவாவுக்குத் துல்லியமாகத் தெரிகின்றது. வெளியே வருகிறான். ஏராளமான சனங்கள். ஒரே கண்ணீர். அநேக மக்களின் துக்கம் யாவரையும் பாடசாலையொன்றுக்குப் போகச் சொல்கிறான். தாயை மெல்லத் திரும்பிப் பார்க்கிறான். "போ.. மகனே" எனச் சொல்வதை மானசீகமாக உணர்கிறான். பெரிதான விம்மல் ஒன்றுடன் வீட்டைத்திரும்பிப் பார்க்கிறான். நடக்கிறான். பகல் மீது இருள் மையல் கொள்ளத் தொடங்குகிறது. பகல் அந்த இருளை மௌனமாக ஏற்றுக் கொள்கின்றது. பொறுமையுடன் தனது நாளைய விடிவுக்காகக் காத்திருக்க ஆரம்பிக்கின்றது.

(உண்மைக்கதை)

## அன்பின் சோதரா வருக!

*அருளொளி ஆட்சியின்*
*மன்னனே வருக!*
*அன்பினால் உலகாள*
*இயேசுவே வருக!*
*இருளவன் கொடுமைகள்*
*அழியவே வருக!*
*இல்லங்கள் இல்லாதோர்*
*உள்ளங்களில் வருக!*

*மூவர்கள் வாழ்த்தும்*
*பூரண மதியே!*
*முத்தமிழ்ச் சிரிப்பே*
*நத்தார்ப் பிறப்பே!*
*ஆவினர் குடியில்*
*அடைக்கலமாகிய!*
*ஆயர்கள் அன்பின்*
*சோதரா வருக!*

*எங்களின் செபதப*
*மைந்தனே வருக!*
*எண்ணற்றோர் கல்வாரி*
*ஏறுமுன் வருக!*
*திங்கள் மரியாள்*
*தவமே வருக!*
*தமிழே! சமாதானப்*
*புறாவாக வருக!*

*மட்டு நகர் முத்தழகு*



## வாழ்வின் வெற்றிக்கு நண்பர்கள் வேண்டும்

**வா**ழ்க்கைக்கு நண்பர்கள் அவசியம். ஏனெனில் மகிழ்ச்சியான விடயங்களைப் பகிர்ந்து கொள்ளவும், சோகச் சம்பவங்களைப் பகிர்ந்து கொண்டு ஆறுதல் பெற்றுக் கொள்ளவுமே ஆகும்.

எமது வாழ்வின் சக நண்பர்கள் எமது அனுபவங்களைக் கொண்டவர்கள். இதனால் சில முக்கிய துயர சம்பவங்களுக்கோ, அல்லது, சில தீர்மானங்கள் எடுப்பதற்கோ அவர்களின் அனுபவம் போதாது இருப்பது உண்மையே.

இதனால், அனுபவம் உள்ள மனிதர்களை நாம் இனங்கண்டுகொள்ள வேண்டும், அது எமது ஆசிரியராகவோ, சில துறை சார்ந்த முதியவர்களாகவோ, உறவில் சிறந்த உயர் மனிதர்களாகவோ இருக்கலாம். இவர்களது உயர் கருத்துக்களையும் அனுபவப் பகிர்வுகளையும் கேட்க வேண்டும். இது வாழ்வுக்குக் கை கொடுக்கும்.

வாழ்வின் வெற்றிக்கு அனுபவ முதிர்ச்சி கொண்ட மனிதர்களின். ஆலோசனைகள் மிகவும் முக்கியம். அதனால் எமது முதியவர்களை பேணுவோம், அவர்கள் மீது நட்புக் கொள் வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலஞ்சென்ற
'யோசப் பரராஜசிங்கம்' பா. உ
அவர்களின்
இறுதிச் சடங்கில்
திரு/மட். மறை மாவட்ட ஆயர்

# நிலையான சமாதானம் ஒன்றுதான் வன்முறைகளை வலுவிழக்கச் செய்ய முடியும்

மட்டக்களப்பு மாவட்ட பாராளு மன்ற உறுப்பினரும், தமிழ் பேசும் மக்களின் தலைவரும் மூத்த அரசியல்வாதி யுமான திரு. யோசப் பரராஜசிங்கம் அவர்களின் அகால மரணம் தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் பெரும் சோகத்துள் ஆழ்த்தி யுள்ளது. கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு நடைபெற்றுக் கொண் டிருந்த வழிபாட்டின் போது இடம் பெற்ற இந்தக் கொடூர நிகழ்வு எமக்கு பெரும் அதிர்ச்சியையும் மிகுந்த வருத்தத்தையும் ஏற் படுத்தியுள்ளது.

பல தசாப்த காலமாக அரசியலிலே ஈடுபட்டு, தமிழ் பேசும் மக்களுக்குப் பணிபுரிந்தவர் யோசப் பரராஜசிங்கம் அவர்கள். தமிழ் மக்கள் பெரும் அவலங் களைச் சந்தித்த காலங்களில் எல்லாம் மக்களுக்குப் பக்க பலமாக இருந்து அவர் செய்த சேவைகள் அளப்பரியன. தமிழர் தரப்பு நியாயங்களையும் அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளின் உண்மை நிலையையும் ஊடகங் கள் வாயிலாகவும், நேரடியாகவும் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் சொல்லியவர். தமிழ் மக்களது எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு இதய சுத்தியோடு, உறுதியான கொள்கைப் பிடிப்பு ள்ளவராக அவர் விளங்கினார்.

அத்தகைய ஒருவரது மரணம் தமிழ் பேசும் மக்களுக்குப் பேரிழப்பைத் தருவதாகும் என்பதில் ஐயமி ல்லை.

கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த அவர் புனித மிக்கேல் கல்லூரியிலே கல்வி பயின்றவர். அரச உத்தியோகத்தராக, ஒரு பத்திரிகையாளனாக வளர்ந்தவர். மென்மையான சுபாவம் கொண் டவர். தமது முழு நேர அரசியல் பணிகளுக்கு மத்தியிலும் திருச் சபைக் கடமைகளிலும் அக்கறை கொண்டிருந்தார். தேவையான பொழுது உதவிகள் புரிய அவர் என்றுமே பின்வாங்கியதில்லை. அனைவரோடும் புன்சிரிப்போடு சிநேகம் காட்டுகின்ற அவரது எளி மையை யாரும் மறந்துவிட முடியாது. என்னுடைய நல்ல நண் பராகவும் இருந்தார். கிறிஸ்தவராக இருந்த அதேவேளை ஏனைய மதங் களையும் மக்களையும் மதித்தவர்.

குறிப்பாக, தமிழ் பேசும் மக்கள் அனைவரும் இன மத வேறுபாடற்று ஒற்றுமையாக வாழவேண்டும் என்று விரும்பி யவர். தமிழ் பேசும் மக்களின் நலனுக்காகவும் இப்பிரதேச வளர் ச்சிக்காகவும் தமது வாழ்நாளில் பெரும் பகுதியை அர்ப்பணித்த யோசப் பரராஜசிங்கம் அவர்களின் மறைவு மிகவும் துன்பகரமானது மட்டுமல்ல, நிச்சயமற்ற இன்றைய சூழலில் இலகுவில் ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பாகவும் எமக்குத் தோன்றுகின்றது.

வன்முறை எங்கிருந்து வந்தாலும் எந்த வடிவில் வந்தாலும் அது வெறுக்கத் தக்கதுதான் என்பதை திரு. யோசப் பரராஜசிங்கத்தின் மரணம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. நீதியான நிலையான சமாதானம் ஒன்றுதான் வன்முறைகளை வலுவிழக்கச் செய்யமுடியும். அத்தகையதொரு சமாதான வாழ்வு மலர உழைப்பதுதான் அவருக்குச் செலுத்தும் அர்த்த முள்ள அஞ்சலியாக அமையும்.

நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனாக வாழ்ந்து, தனது மக்களுக்குப் பணிசெய்து, அதற்காகவே உயிரையும் இழந்த திரு. யோசப் பரராஜசிங்கம் அவர்கள், இறைவனது திரு வடியில் நித்திய சமாதானத்தில் இளைப்பாறவேண்டுமென்று மன்றாடும் அதேவேளை, அவரோடு படுகாயமடைந்து சிகிச்சை பெறும் அவரது துணைவியார் நலம் பெறவும் அவரும் அவரது குடும் பத்தினரும் இந்தப் பெரும் துயரத்திலிருந்து விடுபட்டு ஆறுதலும் அமைதியும் பெறவும் எல்லா வல்ல இறைவன் அருள் புரிவாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

ஆழியோன்

## நம்பிக்கையூட்டும் கவிதைவரிகள்

அண்மையில் மிகவும் அழகிய கவிதைப் புத்தகமொன்றைப் படிக்க நேர்ந்தது. சொல்லி விளக்கமுடியாத அழகிய புத்தகம். ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு வர்ணத்தில் அழகாக அச்சிடப்பட்டுள்ளன. தலைப்பு - 'நம்பிக்கையுடன்.....' விரைந்து வளர்ந்து வரும் கவிஞர் பா. விஜய் அவர்களின் கவிதைநூல்தான் நம்பிக்கையுடன்.... இதன் விலை 190.00 இந்திய ரூபாய்கள். பிரபலமான சினிமாப்பாடல்

'ஒவ்வொரு பூக்களுமே
சொல்கிறதே
வாழ்வென்றால் போராடும்
போர்க்களமே!...'

என்ற பாடலின் (சேரனின் ஆட்டோகிராப் என நினைக்கின்றேன்...) ஆசிரியர் தான் பா.விஜய் அவர்கள்.

வாழ்க்கைக்கு நம்பிக்கையூட்டுவதற்கான முயற்சியே இக்கவிதைகள். ஒரு 'டயறி' போன்று புத்தகத்தை வடிவமைத்துள்ளார்கள். ஒவ்வொரு பக்கத்தினதும் இடது மேல் மூலையில் பெட்டிக்குள் இவ்வாறு காணப்படுகின்றது.

நல்ல நேரம்.
24மணி நேரம்.
ராகுகாலம்
உழைக்காத நேரம்
கெட்டநேரம்
தீயன தோன்றும் நேரம்.

வலது பக்கமேல் மூலையில் பொது அறிவுத் தகவல்கள். பக்கத்தின் உடலில் புதுக் கவிதை வரிகள். கடைசி அடிப்பக்கத்தில் பொன் மொழிகள்.

கவிதைகளின் ஒவ்வொருவரியும் வாழ்க்கைக்கு தெம்பையும் நம்பிக்கையையும் தருகின்றன. உற்சாகம் தரும் வரிகள். ஊக்கம் தரும் சிந்தனைத் துளிகள். சில மாதிரித் துளிகளினைப் பார்ப்போம்.

அருவியின் வீழ்ச்சி
நதியின் எழுச்சியாகின்றது

வெறி கொள்
வெல்வதற்கு!
திட்டமிடு...!
திட்டமிடா உழைப்பு
பாலைவனத்தில் ஆழ்குழாய்த் திட்டம்!

* *

முடியுமா என்று
யோசிப்பது
முதல் பலவீனம்

* *

விழித்திரு...
நீண்ட உறக்கம்
என்றுமே இறக்கம்!
முட்களில் மோதி
கிழியாதவனுக்குப்
பூக்களைத் தடவும்
தகுதி கிடையாது

* *

நீ அக்கினிக் குஞ்சு
என்ன செய்யும் உன்னை
இடர்கள் என்னும்
இலவம் பஞ்சு

* *

அலைகளைப் போல
அயராமல் முயற்சிசெய்!
தோல்வி என்பது
சிந்திக்க தெரியாதவனின்
சித்தாந்தம்.
நிலாவைத் தொட்டது
மூன்று தோல்விகளுக்குப்
பிறகுதான்.

* *

இவ்வாறாக 144பக்கங்களும் சிந்தனைச் சுடர்விடும் கூர்மையான வரிகள். அருமையான பொன்மொழிகளை ஒவ்வொரு பக்கமும் பொறித்துள்ளார். உழைப்பு என்பது அவமானமல்ல சோம்பேறித்தனமாய் அமர்ந்திருப்பது தான் அவமானம் - செஷல்டாப். மனித இனம் முழுவதும் புரிந்து கொள்ளக்கூடிய ஒரே பாஷை உழைப்புத்தான்- சேஷாரஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்களை இந்தியர்கள் என்னமாய் இதயங்களில் ஏற்றிவைத்துள்ளார்கள்! அவரை இனம், மொழி, மதம் என்பனவற்றைக் கடந்து போற்றுகின்றார்கள். பாருங்கள் கவிஞர் அவரைப் போற்றுகின்றவிதத்தை

அப்துல் கலாம்
இந்தியாவின் மேற்கூரையில்
விஞ்ஞானக் கொடியேற்றிய கவிஞர்.

இந்திய விண்வெளிகளில்
படிந்திருந்த இருட்டை
ராமேஸ்வரத்திலிருந்து உதித்த
இந்தச் சூரிய வெளிச்சம்தான்
சலவை செய்தது.

இந்தியாவின்
ஸ்தூபிகளின்
சின்னத்தில் நான்கு முகம் உண்டு
ஒரு முகம் மகாத்மா
இடது முகம் சுபாஷ்
வலது முகம் நேரு
நான்காவது முகத்தை
நாட்டிற்குக் காட்டியது காலம்
அது அப்துல்கலாம்!
கலாமுக்குள் இருக்கிறது
கடலளவு நம்பிக்கை
இந்தக் கலாமின் சிந்தனைகள்தான்
இந்திய நாட்டின் தும்பிக்கை.

எப்படித் தங்கள் ஜனாதிபதியைப் போற்றிப் பாடுகின்றார் கவிஞர்! ( நமது நாட்டில் எல்லாம் தலைக்கீழ்) இப்படியான ஒரு கவிதை நூல் நம் நாட்டில் வெளிவரமுடியுமா? போட்டமுதல் மீளுமா என்பது சந்தேகமே? புலரும் புத்தாண்டில் எமது மக்களின் குறிப்பாக இளைஞர், இளம் பெண்கள் நம்பிக்கை கொண்டவர்களாக மாறவேண்டும். புது யுகம் படைக்கவேண்டும். அனைவருக்கும் நத்தார் - புத்தாண்டு - தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!

# நினைவஞ்சலி







திரு. செ. செ. அந்தோனிப்பிள்ளை
மண்ணில் : 14 - 19 - 1918
விண்ணில் : 25 - 01 - 1986

திருமதி . இருதய மேரி அந்தோனிப்பிள்ளை
மண்ணில் : 08 - 04 - 1920
விண்ணில் : 15 - 08 - 1996

நித்திய வாழ்வை இவர்களுக்கு
அளித்தருளும் ஆண்டவரே
முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அயலாருக்கு அன்பு செய்யுங்கள்

**எளியோர்க்குதவுதல்**

✝ யூதர் 'ஷேமா' எனும் காலை வழிபாட்டை மதித்துக் கடைப்பிடித்து வந்தனர்.
இணைச்சட்டம் 6:5, லேவி 19:18

✝ ஒரு சட்டவல்லுநர் இயேசுவிடம் இறையரசில் நுழைபவர் யார்? எனக்கேட்டபோது நல்ல சமாரியர் உவமையைக் கூறி விளக்கமுமளித்தார். பிழையான மனப் பாங்குகளுக்கு அடிமைப்பட்டுச் சமாரியர்களைத் தரக்குறைவாக மதித்த யூதச்சட்டவல்லுநருக்கு அயலாருக்கு அன்பு செலுத்துவது பற்றி இயேசு எடுத்துக்கூறினார். இறையன்பு உள்ள ஒருவர் எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனுக்கும் தன் அயலாருக்கும் உண்மையாகவே அன்பு செலுத்துவார். அன்பின் சக்தியை வேறு எதனாலும் செயலிழக்கச்செய்ய முடியாது. இவ்வன்பு முழுமையான பிறர் நலங்கொண்டது. உண்மையான இறைமக்களிடம் இறையன்பு மிளிரும். இந்த அன்பு வாழ்வை வாழ்வதற்கான அழைத்தல் இறைவனிடமிருந்தே வருகிறது. இந்த அழைத்தலுக்கான துலங்கலைக் காட்டுவது எம் கடமையாகும்.

**கிறிஸ்துவை அறிந்து கொள்வோம்**

✝ அன்பைப் பற்றிய அறிவை நாம் எத்தனையோ விடயங்களிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.

✝ அன்பே இறைவன் என்பது கிறிஸ்தவ விசுவாசமாகும். அதன் ஊற்றும் அவரே. இறைவனில்லாது அன்பைப்பற்றிப் பேசமுடியாது.

✝ அன்பு என்பது முழுமையான தியாகமாகும். நம் வாழ்வைப் பிறருக்கு அர்ப்பணிப்பதாகும்.

✝ கிறிஸ்து நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள். அன்னியனாக இருந்தேன் என்னை ஏற்றுக்கொண்டீர்கள். நான் ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள். நான் நோயுற்று இருந்தேன், என்னைக் கவனித்துக் கொண்டீர்கள். சிறையில் இருந்தேன், என்னைத் தேடி வந்தீர்கள் 'என்று கூறுவார் என்பதை தூய மத்தேயு நற்செய்தி 25ம் அதிகாரம் 35தொடக்கம் 37வரையிலான திருவசனங்கள் எமக்கு அறியத் தருகின்றன. இது பொதுத் தீர்வையின் போது நடக்கும்.

✝ ஒவ்வொரு மனிதனும் இறைவனின் அன்புப் படைப்பாவான். எனவே அவர் அவனுள் வாழ்கிறார். நாம் எக்காரியங்கள் (மத்:-25:35-37) செய்தாலும் அவை ஆண்டவருக் கேயாகும்.

✝ கிறிஸ்தவர்களாகிய நாம் ஏழை- பணக்காரன், கற்றோர்- கல்லாதோர், உயர்ந்த சாதி-தாழ்ந்தசாதி, கறுப்பர்-வெள்ளையர் நீதிமான்-பாவி போன்ற பேதங்களைப் பார்க்காது சகலரையும் சகோதரர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களை மேம்படுத்தி, வாழவைக்க இறையழைப்பு விடுக்கப்படுகிறது. இதை ஏற்பது எம் கடமையாகும்.

**செயலாற்றும் அன்பற்ற இடத்தில் விசுவாசம் இல்லை.**

✝ யாக்கோபு 3:14-17, சகோதர அன்பு சொல்லளவிலில்லாமல் செயலில் வெளிப்படுத்தப்படவேண்டும்.

✝ ஆபிரகாம் விசுவாசத்தினூடாகத் தம் மக்களுக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணம் செய்து இறைசித்தத்தை நிறைவேற்றினார்.

✝ இயேசு இறைதந்தை மீது கொண்ட விசுவாசத்தால் எம் பாவங்களுக்காக உயிர்விட்டுச் செயலில் சாட்சிபகர்ந்தார்.

✝ எனவே, நாமும் இறைவிசுவாசத்தினூடாக மக்களின் நலனை முன்னிட்டு உழைப்போம்.

**இயேசுவின் அன்பர்கள்.**

✝ இயேசுவின் மீதுள்ள அளவற்ற அன்பால் தமது சகோதர சகோதரிகள் மத்தியில் அவரைக்கண்டு, அவர்களுக்குப் பணிபுரிவோர், அன்றும் இருந்தனர், இன்றுமுள்ளனர், நாளையும் இருப்பர்.

✝ இத்தகையோரில் டேமியன் அடிகள், பிரெட்ரிக் ஓசானம், அன்னை தெரேசா போன்றோர் விசேடமானவர்கள்.

**அன்னை தெரேசா.**

இவர் கிறிஸ்துவின் பணியை முன்னெடுத்துச் செல்ல, சமூகத்தில் ஒதுக்கப்பட்ட, உதவியற்ற, அனாதைகளான, மரணத்தறுவாயிலிருந்தவர்களுக்காக, பொறுப்பற்றுத்திரிந்து ஏமாற்றப்பட்டவர்களுக்காக, அவர்களின் குழந்தைகளுக்காகப் பணிபுரிந்தார். வயதான, உடல்பலவீனமான அன்னை தெரேசா செய்தது நற்கருணையில் எழுந்தருளியிருக்கும் உயிருள்ள கிறிஸ்துவின் வல்லமையினூடாகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேமியன் அடிகள்.
ஜெர்மனியில் பிறந்து, தமது ஆடம்பர வாழ்வைத் துறந்து, யாருமே செல்லாத தொழுநோயாளிகளால் நிறைந்திருந்த "ஹவாய்"தீவுக்குச் சென்றார். அங்கே துன்பப்படும் மக்களைத் தேற்றும் நோக்கத்தைக் கொண்டுதான் அவர் அன்புத் தொண்டு புரிந்தார். தம் திருப்பலியில் அவர்களுக்காகச் செபிப்பார். இவரைப் பற்றிய ஓர் உண்மை, எமக்கு இதனைத் தொண்டாகச் செய்த இவரது முடிவையும் தெரிவிக்கிறது. ஒருதடவை திருப்பலியில் "இப்போது நாம் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காகச் செபித்தல் வேண்டும்" என்று கூறிச் செபித்தவர், இன்னொரு நாள் திருப்பலியில் "இன்று நாம் தொழுநோயாளிகளான நமக்காகச் செபிப்போம்" என்று செபித்தார். அங்கிருந்த அனைவரும் அழுதனர். காரணம் அவர்களுக்குப்பணிபுரிந்த டேமியன் அடிகள் ஒருதொழுநோயாளியாக மரணத்தை எதிர் நோக்கியுள்ளார் என்பதுதான். இவர் இத்தீவிலேயே இறந்தார்.

பிரெட்ரிக் ஓசானனாம்.
பிரான்சில் பிறந்த இவர் ஒரு சட்டத்தரணி. திருமுழுக்குப்பெற்றபோது கிடைத்த பொறுப்பையேற்றுச் சமூகத்துக்கு அளப்பரிய பணியாற்றினார். ஓர் ஏழைக்குக் கொடுக்கும் சிறு கொடையை விட அவ்வேழையின் வாழ்க்கை நிலையை உயர்த்தி விடுவதே சிறப்பென நினைத்தவர். உலகமுழுவதும் இப்பணி பரவவேண்டும் மென்ற நோக்கத்துடன் புனித வின்சன்.டி பவுல் எனும் பெயரில் ஓர் இரக்கச் சபையை ஆரம்பித்தார். அது இன்று உலகமுழுவதும் பரவியுள்ளது.

இன்று எம்மோடிருக்கும் மக்கள்.
✢ முன்னெப்போதுமில்லாதபடி ஏழ்மை, எளிமை, துரதிர்ஷ்டம் என்பன மக்களை ஆட்டிப்படைக்கின்றன.
✢ செல்வந்தன் ஏழையை மிதிக்கிறான். அதிகாரமுள்ளவன் அதிகாரமில்லாதவனை அழிக்கிறான். அநீதி எங்குமுள்ளது.
✢ அன்று போலவே இன்றும் உலகியல் ரீதியான ஏழ்மையும், ஆன்மீக ஏழ்மையும் மக்களிடம் காணப்படுகின்றன.
✢ இவர்களுக்குத் தேவையானதையுணர்ந்து, துன்பங்களை அறிந்து முயன்றளவு உதவிசெய்ய வேண்டும். "நல்ல சமாரியன்" போன்று உதவ முன்வரவேண்டும்.
✢ கிறிஸ்தவத்தை வாழவைக்க வேண்டுமாயின் நம்மை அர்ப்பணம் செய்ய உண்மையாக முன்வர வேண்டும்.
✢ அயலவனுக்குப்பணி செய்வதும் அன்பின் கட்டளையைச் செயற்படுத்துவதும் மிக முக்கியம் என்பதை நாம் உணர வேண்டும்.

–மெற்றில்டா–

(1ம் பக்க தொடர்ச்சி)

*அதவாது-*
*யுத்தம் முடிவு பெற்று*
*அபிவிருத்தி வேலைகள் ஆரம்பமாகும்*
*இதைத்தான்-*
*அனைத்து இலங்கை மக்களும்*
*ஆவலுடன் எதிர்பார்த்து காத்து நிற்கிறார்கள்.*
*பிறக்க இருக்கும் 2006ம் ஆண்டில் இந்த*
*ஆசைகள்,*
*அவர்கள் நிஜமாக வேண்டும் என்பதே*
*எமது பிரார்த்தனை.*
*ஊர் திருந்த வேண்டுமென்றால்*
*உன்னைத் திருத்து என்பார்கள்.*
*ஊருக்குள் சமாதானம் வேண்டுமென்றால்*
*உனக்குள் சமாதானம் வேண்டும்.*
*இயேசு கொண்டுவந்த சமாதானம்*
*உனக்குள் தங்கவேண்டு மென்றால்,*
*உன் மனம் நல்ல மனமாக மாறவேண்டும்*
*அந்தச் செய்தியைத்தான் வான தூதர்கள்*
*பாடிமகிழ்ந்தார்கள்.*
*'...உன்னதத்தில்... அமைதி உண்டாகுக'*
*(லூக்-2:13,14)*

*அனைவருக்கும் 'Xmas' புத்தாண்டு*
*நல்வாழ்த்துக்களும், இறையசீரும் உரித்தாகுக.*

ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவின் பிறப்பு வாழ்வில் தொடர வேண்டும்



மார்கழிப் பிறந்தால் குளிரும் கூட வரும். அதேபோன்று கிறிஸ்மஸ் உணர்வுகளும் கூட வரும். கொண்டாட்டத்தின் அறிகுறிகள் ஆங்காங்கே தென்படும். வீதிகளும், வியாபார நிலையங்களும் சோடனைக் கோலம் பூண்டு கிறிஸ்மஸை எடுத்தியம்பும். சந்தாக் குளோஸ் தாத்தாக்களும், கிறிஸ்மஸ் மரங்களும் கிறிஸ்து பிறப்பின் விழாவை முன்னறிவிக்கும். வாழ்த்து மடல்களின் பரிமாற்றங்கள் உறவுகளுக்கிடையே இடம்பெறும். இப்படியாக எங்கும் ஒரே கொண்டாட்ட மயம்தான்.

கொண்டாடத்தான் வேண்டும். ஒரு சமுதாயத்தில் கொண்டாட்டங்கள் பல நன்மைகளைப் புரிகின்றன. ஒருசில நாட்களில் நடந்தேறி முடியும் வெளிக்கொண்டாட்டங்களோடு எல்லாமே மறைந்து விடுகின்ற நிலை இருக்கக்கூடாது.

என்னத்தைக் கொண்டாடுகின்றோம்? எதற்காக கொண்டாடுகின்றோம்? என்ற வினாக் கள் எழுப்பப்பட வேண்டும். கொண்டாட்டத்தின் உள்ளர்த்தங்களை நாம் உள்வாங்க வேண்டும். இக் கொண்டாட்டத்தின் கதாநாயகன் யார்? அவர் எப்படிப்பட்டவர்? ஏன் பிறந்தார்? அவர் இலட்சியங் களும், கனவுகளும் என்ன என்ற வினாக்க ளுக்கு விடை தேட வேண்டும். தேடப்பட்ட விடைகள் எனக்குள் உள்ளெடுக்கப்பட்டு அந்தக் கதாநாயகன் இயேசுவை, மெசியாவைப் பின்பற்றி ஒரு சீடனாக, நீ மாறும் போது, நீ வாழும்போது அது உன் வாழ்க்கையில் தொடர் கொண்டாட்டங்களாக அமைய வேண்டும். உன்னோடு கூட இருப்பவர்கள் அதில் குளிர்காய வேண்டும். அதாவது, உன்னால் மற்றவர்கள் வாழ்வு பெற வேண்டும். பிறர் வாழ்வதற்காகத்தானே இயேசு பிறந்தார். அதைக் கொண்டாடும் நீ உன்னால் மற்றவர்கள் வாழ்வு பெறும்படி உன் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

உன் கொண்டாட்டங்கள் உணர்ச்சி வசப்பட்ட ஒன்றாய் மட்டும் இருந்து விடாமல் உன் உள்ளத்தில் சில உண்மைகளை உணர்த்த வேண்டும். கொண்டாட்டங்களுக்குள்ளும், ஆரவாரங்களுக்குள்ளும் மறைந்து, புதைந்து கிடக்கின்ற சில நிஜங்களை நீ சந்திக்க வேண்டும். கொண்டாட்டத்திற்குரியவரான இயேசு ஒரு கொள்கையோடு பிறந்தவர். ஒரு கொள்கைக்காக வாழ்ந்தவர். "என் சித்தமல்ல, உன் சித்தம் தேவா" என்ற கொள்கையை இலட்சியமாகக் கொண்டவர். தன்னுடைய விருப்பத்தை விட்டுவிட்டு இறைவனது சித்தம் என்ன என்பதை உய்த்துணர்ந்து வாழ்ந்தவர் இயேசு. நீ உன் வாழ்வில் பலதரப்பட்ட சூழ்நிலைகளை சந்திக்கின்ற பொழுது உன் சித்தம், உன் விருப்பம் என்பவற்றை சற்று ஒதுக்கிவிட்டு அந்தந்த வேளைகளில், அந்தந்த சூழ்நிலைகளில் நீ என்ன செய்ய வேண்டும் என இறைவன் விரும்புகிறார் என்பதைக் கண்டறிந்து செயற்படு. அப்படி செயற்படும் போது நீ இறைவனை மகிமைப்படுத்தும் போது இறைவனும் உன்னை மகிமையால் நிரப்புவார்.

இயேசுவின் பிறப்பை மட்டும் நினைத்து எடுக்கப்படும் கொண்டாட்டம் ஒரு முழுமையான கொண்டாட்டமல்ல. இயேசுவின் பிறப்பிலிருந்து தொடரும் வாழ்க்கை நிகழ்ச்சிகள், அவர் சந்தித்த சூழல்கள், சவால்கள், சமய சமூகத் தலைவர் களது தாக்கங்கள், பாலைவன, ஜெஸ்தமனித் தோட்டத்து அனுபவங்கள், சிலுவைச் சாவின் கொடூரங்கள் இவையனைத்தும் சந்திக்கப்பட்டு ஈற்றில் உயிர்ப்பின் மகிமையைக் காணும் போது தான் ஒரு கொண்டாட்டம் முழுமை பெறுகின்றது.

உனது கொண்டாட்டமும் முழுமை பெற வேண்டுமென்றால் கிறிஸ்து பிறப்பு விழாவோடு மட்டும் உன் கொண்டாட்டம் முடிவடையக் கூடாது. நீ தொடரும் வாழ்க்கையில் கிறிஸ்து பிறப்பின் அர்த்தங்கள் தொனிக்க வேண்டும். அதாவது எல்லா சூழ்நிலைகளிலும், எல்லா வேளைகளிலும் "என் சித்தமல்ல, உம் சித்தம் இறைவா" என்ற எண்ணம் உன் மனதில் வேரூன்ற வேண்டும். நீ உனக்காக வாழாமல் பிறருக்காய் வாழ வேண்டும். உன்னால் பிறர் வாழ்வு பெற வேண்டும். நீ பிறருக்காக வாழும் போதும், உன்னால் பிறர் வாழ்வு பெறும் வேளையிலும் கிறிஸ்து பிறந்து கொண்டேயிருக்கிறார். கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடுவதோடு மட்டும் நின்று விடாமல் கிறிஸ்துவின் பிறப்புக்களை அடுத்தவர் வாழ்க்கையில் நிகழச் செய்யும் ஒருத்தனாக, ஒருத்தியாக நீ வாழ்ந்திடு. அப்போது தான் உன் கொண்டாட்டமும் முழுமை பெறும்.

**—அருட்திரு. அ. தேவதாசன்**
திரு/மட். மறைமாவட்ட குருமுதல்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இம்முறை தொண்டனின் சில நிமிடங்கள் பகுதிக்காக ஒரு கலைஞரைச் சந்தித்தோம். இவரைச் சந்தித்த கதை மிகவும் வித்தியாசமானது. அண்மையில் கொழும்பில் உள்ள தேசிய நூலகம் மற்றும் ஆவணவாக்கல் சபைக்குச் செல்லவேண்டியிருந்தது. தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சில போட்டிகளைத் தேசிய நூலகம் நடத்தியிருந்தது. அதில் புகைப்பட போட்டியும் ஒன்று. அப்போட்டியில் மட்டக்களப்பைச் சேர்ந்த இராமச்சந்திரன் என்பவர் இரண்டு பரிசுகளைப் பெற்றிருந்தார். அவருக்கான கடிதங்களை எம்மிடம் தந்து அவரிடம் சேர்ப்பிக்கும்படி கேட்டார்கள். அப்படியே கடிதங்களை அவரிடம் ஒப்படைத்தோம். அப்போதுதான் அவரை தொண்டனுக்காகச் செவ்வி காணவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. இதன்படி அவரை அண்மையில் சந்தித்தோம்.

: உங்களைப் பற்றிச் சில வார்த்தைகளில் அறிமுகம் செய்யுங்களேன்

: என் பெயர் வைத்தியலிங்கம் இராமச்சந்திரன். 1941 மார்ச்மாதம் 4ம் திகதி பதுளையில் பிறந்தேன். படித்ததும் பதுளையில்தான். பின்னர் அரசாங்க அச்சகத்தில் பாராளுமன்றத்திற்கான பிரிவில் பணியாற்றினேன். சுமார் இருபது வருட சேவையின் பின் ஓய்வு பெற்றேன். தற்போது மனைவியுடன் மட்டக்களப்பில் வசிக்கின்றேன்.

: உங்கள் கலைத்துறை ஈடுபாடு பற்றிச் சொல்லுங்கள்.

: எனக்கு கலைத்துறையில் பல்வேறுதுறைகளில் ஈடுபாடு உண்டு. ஓவியத்துறை, புகைப்படத்துறை கைப்பணித்துறை என்பனவற்றில் மிகவும் ஈடுபாடு உண்டு.

கேள்வி: எழுத்துத்துறையில் ஈடுபாடு உண்டா?

: எனது அப்பா வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளின் நிருபராகப்பணியாற்றியவர். (பதுளையில்) அப்போது அவருக்காக நானும் செய்திகளை எழுதிக்கொடுப்பதுண்டு. அத்துடன் அக்காலத்தில் தினகரன் பத்திரிகையுடன் ராதா என்னும் பத்திரிகையும் வருவதுண்டு. அதில் சிறுகதைகளை எழுதியுள்ளேன்.

: ஓவியத்துறையில் உங்கள் ஈடுபாடு எப்படி?

: சுயமாகவே ஓவியம் வரையப்பழகினேன் ஊவா மாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற ஓவியப் போட்டிகளில் விருதுகளையும், பரிசுகளையும் பெற்றுள்ளேன்.

: அண்மையில் இலங்கையில் தேசிய நூலகத்தால் நடாத்தப்பட்ட புகைப்படப் போட்டியில் உங்களுக்கு இரண்டு பரிசுகள் கிடைத்தன அல்லவா? அதற்கு எம் பாராட்டுக்கள். புகைப்படத்துறைக்கு எவ்வாறு வந்தீர்கள்.?

: ஆம். எனக்கு அப்போட்டியில் இரண்டு பரிசுகள் தேசியரீதியில் கிடைத்தன. ஒவ்வொன்றும் தலா. ஐயாயிரம் பெறுமதியான புத்தகப் பொதிகள். அவற்றில் தமிழ், சிங்களம், ஆங்கிலப் புத்தகங்கள் உள்ளன. தமிழ்ப் புத்தகத்தை மட்டக்களப்பு பொது நூலகத்திற்கும், சிங்களப் புத்தகங்களை பதுளை பொது நூலகத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பதென முடிவு செய்துள்ளேன். சிறுவயதாக இருக்கையில் புகைப் படச்சுருள் ஒன்றின் விலை சுமார் 50சதம்தான். எனவே சுயமாக புகைப்படங்கள் எடுக்கப் பழகினேன். என்னிடம் ஒரு பழைய நவீனத்துவம் அற்ற கமரா ஒன்றுதான் உண்டு. அதை வைத்துக்கொண்டுதான் புகைப்படங்கள் எடுத்து போட்டிகளுக்கு அனுப்பிக் கொண்டு இருக்கின்றேன். சில வருடங்கட்கு முன் லயனல் வென்ற் ஆர்ட் கலரியில் நடைபெற்ற கண்காட்சியில் தேசிய ரீதியில் 3ம் இடம் பெற்றேன்.

2000ம் ஆண்டில் மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாச்சாரப் பேரவை நடத்திய புகைப்படப் போட்டியில் முதலாம் இடம் பெற்றேன். இவற்றிற் கெல்லாம் மகுடம் வைத்தது போல் 1995ல் ஆனந்த விகடன் அகில உலகரீதியில் நடத்திய புகைப்படப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமை என்னால் மறக்க முடியாத ஒன்று.

**கே: நிறையப் பரிசுகளைப் பெற்றுள்ளீர்கள் என்று கூறுங்கள்**

ப: பரிசுகள் பெற்றுள்ளேன் என்றாலும் பரிசுகளைப் பகிர்ந்து கொடுத்து விடுவேன். ஆனந்த விகடன் போட்டியில் இரண்டு சிறுவர்களை வைத்துப் படம் எடுத்தேன். அவர்கள் என் மைத்துணியின் பிள்ளைகள். அவர்கட்கும் பரிசில் பங்கு கொடுத்தேன். இவ்வாறே ஏனையவர்கட்கும்.

**கே: நிறைய கைப்பணிப் பொருட்களைச் செய்தும் பரிசுகள் பெற்றுள்ளதாக அறிகின்றோமே?**

ப: ஆம் (நிறைய தென்னஞ்சிரட்டைகள், விளாம் பழக்கோதுகள் என்பனவற்றில் செய்த அற்புதப் படைப்புகளைக் காட்டுகின்றார்)

**கே: இவற்றைச் செய்ய எப்படி, எங்கே பழகினீர்கள்?**

ப: (சிரிக்கின்றார்) முன்பு விடுமுறையில் வீடு வரும் போது தென்னஞ்சிரட்டையில் "அகப்பை" செய்து கொடுப்பேன், பின்னர் ஓய்வு பெற்ற பின்னர் மெல்ல மெல்ல கைப்பணிப் பொருட்களைச் செய்யப்பழகினேன்.

**கே: இதற்கு எவ்வகையான உபகரணங்களைப் பயன்படுத்துகின்றீர்கள்?**

ப: சிறிய கத்தியொன்று, இரும்பறுக்கும்வாள், நளம்புச் சுருள் ஸ்டாண்ட் ஒன்று இவ்வளவும்தான் என் உபகரணங்கள். (இவ்விடத்தில் அவரின் மனைவி குறுக்கிட்டு கணவரின் கைவிரல்களில் ஏற்பட்டுள்ள காயங்களைக் காட்டுகின்றார். நுணுக்கமாக வாளால் வேலை செய்யும் போது ஏற்படும் காயங்கள் தான் அவை (சாப்பாடு கரண்டியால் தான்).

**கே: இவற்றிற்கும் பரிசில்கள் கிடைத்துள்ளனவா?**

ப: ஆம், அண்மையில் வடக்கு-கிழக்கு மாகாண சபையால் நடத்தப்பட்ட போட்டியில் மூன்று முதலாம் பரிசுகளைப் பெற்றேன். பின்னர் BMICHல் இப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டு விற்பனையாகின.

**கே: இக்கைப்பணிப் பொருட்களுக்கு நிறைய கேள்விகள் வருமே?**

ப: ஆம், ஆனால் விற்பனைக்காக அவற்றை நான் தயாரிப்பதில்லை. ஓர் ஆத்மதிருப்திக்காகத் தான் அவற்றைச் செய்கின்றேன். விளாம்பழக் கோதில் கலைப்படைப்புகளைச் செய்த முதலாவது ஆள் நானாகத்தான் இருக்கும். (மீண்டும் மனைவி குறுக்கிடுகின்றார் - தேங்காய் விளாம்பழம் என்பனவற்றை நான் உடைப்பதில்லை. அவர்தான் அவற்றை அறுத்துத்தருவார். கழிவுப் பொருட்களை கலைப்படைப்புகளாக மாற்றுவதனால் எவ்வளவோ மிச்சம். நேரமும் பிரயோசனமாகப் பயன்படும்.

நற்றில் தொண்டனின் சார்பில் வை. இராமச்சந்திரன் அவர்களிடம் நன்றிகூறி விடை பெற்றுக் கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு மயமாக்கல் காலத்தின் கட்டாயத் தேவை

செசிறியர் கிறிஸ்துராஜ் ஆசீர்வாதப்பர்

"அருட்களின் பெயர்கள் மொழிபெயர்ப்புச் செய்யப்படலாகாது" எனும் தலைப்பில் யாழ் பல்கலைக்கழகக் கிறிஸ்தவ நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி. ஞா.பிலேந்திரன் அடிகளார் எழுதிய கட்டுரை, (மன்னா-நவம்பர்) காலத்தின் தேவைக்கேற்ப மாற்றங்களைக் கொண்டு வருதல்" (THE DOCUMENTS OF VATICAN - Page-123) பண்பாட்டு மயமாக்கல் என்பது ஒரு தேவை (தேசிய மேய்ப்புப்பணி மாநாட்டு (1995) அறிக்கை- பக்-25) ஆகிய கத்தோலிக்க திருச்சபையின் கருத்துக் களைக் கேள்விக்குரியதாக ஆக்கியுள்ளமை அதில் தெளிவாகத் தெரிகிறது. ஆதலால் இது பற்றிச் சிறிதளவாவது ஆராய்தல் பயனுடையதாகும்.

மொழி என்பது வெறுமனே ஒரு கருவி மட்டு மன்று அது குறிப்பிட்ட ஓர் இனத்தின் உணர்வு (Knowledge) உணர்ச்சி (Emotion) யில் ஒன்றிக் கலந்து வளரும் ஓர் உயிர்ப் புச்சக்தி. இக்காரணம் பற்றியே ஆங்கில அறிஞர் ஹட்சன் (Hudson) அவர்கள், மொழியே மக்களின் மனத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பார். (An indroduction to the study of Literature - Page -10)

இவ்வுண்மையையும் காலத்தின் தேவை யையும் முன் கூட்டியே உணர்ந்து கொண்டமை யால்தான், தமிழகம் புக்க தத்துவ போதகர் (Robert de nobile- 1577-1656), வீரமாமுனிவர் (Constatine Joseph Besli -1680- 1747) ஆகிய கத்தோலிக்கத் துறவிகள் தமிழகத்தில் தமிழரோடு தமிழராக வாழ்ந்து அந்த மண்ணில் தமது மறைக்கருத்துக்களை விதைத்து வெற்றியும் பெற்றனர். இது குறித்து டாக்டர். மு.வ. அவர்கள் இவ்விதம் சிலாகித்து எழுதுவார்.

அக்காலத்தில் மதுரையில் தங்கி தமிழ்ப் பிராமணரின் கோலம் பூண்டு தமிழராகவே வாழ்ந்த ஐரோப்பியப் பாதிரியார் De Nobile என்பவர் தமிழ் மக்கள் மதித்துப் போற்றும் வகையில் புலால் உணவு விட்டுத் தமிழ் நாட்டுச் சமயப்பழக்க வழக்கங் களையும் மேற்கொண்டார். கையில் ஜெபமாலையும் காலில் பாதக்குறடும், காதில் குண்டலமும் உடம்பில் காவி உடையும் கொண்டு வாழ்ந்தார். பூனூலும் தரித்தார். (தமிழ் இலக்கிய வரலாறு -பக் -241)

அறுபதுகளின் முற்பகுதியில், வத்திக்கான் பேரவை பிரகடனம் செய்வதற்கு முன்பே காலத்தின் தேவை எது என்பதைத் தீர்மானித்து தமிழ் மக்களின் பண்பாட்டோடு இரண்டறக் கலந்து வாழ்ந்த மேலைநாட்டுக் கத்தோலிக்கத் துறவிகள் தமிழர் பண்பாட்டு மயமாக்கலில் ஈடுபட்டமை ஒன்றும் புதுமை அல்ல. ஆயினும் இப் பண்பாட்டு மயமாக்கல் என்பது தமிழகத்தில் மேலை நாட்டு கத்தோலிக்கத் துறவிகளின் காலத்தில் தான் (16ம்-17ம் நூற்றாண்டு) தோற்றம் பெற்ற ஒன்று அல்ல. இது சங்க காலத்திலேயே (வடமொழி தமிழகத்தில் ஊடுருவத் தொடங்கிய காலப்பகுதி) உருவாகி விட்டமையை, ஷண்முகம் (ஆறுமுகம்) பார்வதி (மலைமகள்) கிருஷ்ணன் (கார்வண்ணன்) லக்ஷ்மி (இலக்குமி) லக்ஷ்மணன் (இலக்குவன்) ஆகிய பெயர்கள் எடுத்துக் காட்டும்.

தனது நாட்டிலும், தாய்மொழியிலும் பற்றும் பக்தியும் கொண்ட ஓர் இனம், தனக்கு முற்றிலும் அந்நியமான ஒரு மொழியை இறுதிவரை ஏற்றுக் கொள்ளாது என்பதனை நன்குணர்ந்த பழந்தமிழ்ப் பாவலர்கள் குறிப்பிட்ட வடமொழிச் சொற்களின் பொருள் குன்றா வண்ணம் அவற்றுக்கு மாற்றீடாகத் தமிழ்ப் பெயர்களை உருவாக்கித் தந்தமையை இத்தருணத்தில் நாம் நன்றியுணர்வோடு நினைவு கூருதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கியத்தின் இந்த மரபினையும் பின்னாளில் தெரிந்து கொண்ட கத்தோலிக்கத் துறவிகள், பழந்தமிழ்ப் புலவர்களின் வழியில் தமது மறையோடு தொடர்புடைய லத்தீன், கிரேக்க, கீபுறு மொழிகளில் அமைந்த தனி மனிதர்களின் பெயர்களையும் சொற்களையும் தமிழ்ப்படுத்தியமை வள்ளுவன் வார்த்தையின்படி காலத்தினால் செய்த நன்றி அல்லவா?

வீரமாமுனிவருக்குப் பின் தமிழகத்தில் தோன்றிய கத்தோலிக்க, கிறிஸ்தவக் கவிஞர் பெருமக்கள் (வேத நாயகசாஸ்திரியார், கிருஸ்ண பிள்ளை, மயூரம் வேதநாயகம்பிள்ளை, கனகசபைப் புலவர், வேதமாணிக்கம், அந்தோனிக் குட்டி அண்ணாவியார், ஜி.கே. வேதநாயகம் ஐயர், டி.ஏ ஞானபரணம், எஸ். ஆரோக்கியசாமி, வீ.ப.கா. சுந்தரம் முதலானோர்)

பண்பாட்டு மயமாக்கலின் ஒரு முக்கிய அம்சமாக சைவ சித்தாந்தக் கருத்துக்கள் சிலவற்றை உள்வாங்கி, அவற்றைத் தமது சமய பனுவல்களுக் குள் புகுத்தி, கத்தோலிக்க கிறிஸ்தவ இறையியல் கோட்பாடு ஒர் அந்நியச் சரக்கல்ல என்று உலகிற் குக் காட்டவும் செய்தனர். இதற்கு ஒரு சான்றாக தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரின்,

'கனல் மூண்ட இரும்பு போல உன்
சாயலிலங்க விக்கசடன் காணாதொழியவும்
காலாணி என் சிரசில் ஊடுருவிக் குரிசிலுன்
காலடியில் நான் பதியவும்'

எனும் பாடலில் சைவசித்தாந்தத்தின் தாடலை (தாள் தலை) எனும் கோட்பாடு துல்லியமாக விளங்குவதைக் காணலாம்.

வேதநாயக சாஸ்திரியாரின் வியக்கத்தக்க இந்தப்பணியிலிருந்து, கத்தோலிக்கத்தின் வளர்ச் சிக்காகத் தமிழையும், தமிழ்சார்ந்த அனைத்தையும், மேலே குறிப்பிட்ட கவிஞர் பெருமக்களில் பலர் பயன்படுத்துவதில் முன்னணியில் நின்றமை நன்கு தெளிவாகும். கத்தோலிக்க, கிறிஸ்தவக் கவிஞர் களின் இவ்வரிய இயல்பினை டாக்டர். தி. தயானந்தன் பிரான்சிஸின் பின்வரும் வார்த்தைகள் அப்படியே படம் பிடித்துக் காட்டும்.

தமிழையும் தமிழ் இலக்கிய மரபுகளையும், சமயநெறிமுறைகளையும் விட்டு விட்டால் தான், கிறிஸ்தவர்களாக முடியும் என்று ஒரு விதி இருந்தி ருந்தால், இந்தக் கவிஞர்கள் கிறிஸ்தவம் தழுவி யிருக்க மாட்டார்கள் என்று கூடத் துணிந்து கூறலாம். (கிறிஸ்தவக் கவிஞர்களும் தமிழ்ப் பண்பாடும். பக் 2)

தமிழ்மொழியின் தனித்துவம்- அதன் பாரம்பரியச் சிறப்புக்கள்- இந்தக் காரணங்களின் பின்புலத்தில் (பிலேந்திரன் அடிகளார் குறிப்பிட்டு ள்ளது போல) தமிழில் மட்டும் தோற்றம் பெற்ற பண்பாட்டு மயமாக்கலின் வழியில் வீரமாமுனிவர், தமது காவியத்தில் (தேம்பாவணி) யோசப், ஜோன், ஈசாக் என்போர்க்கு, வளன், கருணையன், நகுலன் எனும் நாமங்கள் சூட்டி மகிழ்ந்ததோடு சிவன் எனும் ஒரு பாத்திரத்தையும் உருவாக்கி அப்பனுவலி உலாவ விட்டார்.

வீரமாமுனிவரின் இச் செயற்பாட்டிற்கு கம்பராமாயணமும் (கி.பி.12ம் நூற்றாண்டு) ஒர் ஆதர்சமாக இருந்திருக்கக்கூடும். வால்மீகியின் இராமாயணத்தைத் தழுவியும், புதியன புகுத்தியும் கம்பன் பாடிய இராமாயணத்தில் வடமொழியில் அமைந்த அக்கதை மாந்தர் சிலரின் பெயர்களை அவன் தமிழ்ப் படுத்தியமையைப் பண்பாட்டு மயமாக்கலாகவே வீரமாமுனிவரின் 'புரட்சி' உள்ளம் கருதியிருக்கும். எனவேதான் கம்பன் வழியில் தமது காவியத்திலும் அத்தகைய பெயர்களை அவர் உருவாக்கினார் என்று நாம் ஊகிப்பதில் எத்தகைய தவறும் இருப்பதற்கில்லை.

16ம்,17ம் நூற்றாண்டுகளில் கத்தோலிக்கத் துறவிகள் இருவரால் தமிழகத்தில் புகுப்பிக்கப்பட்ட இந்தப் பண்பாட்டுமயமாக்கல் தமிழுக்கிணையாக, வடமொழியும், ஆங்கிலமும் நன்கு கற்றுணர்ந்த சுவாமி வேதாசலம் அவர்கள் தலைமையில் 20ம் நூற்றாண்டில் தனித்தமிழ் எனும் பெயரில் ஒரு பெரும் கலாசார மொழிப் புரட்சியாகத் தமிழகத்தில் வெடித்துக் கிளம்பியது. இப்புரட்சிக்கு பெரும் துணை யாக நின்றவர் பிராமணரான சூரியநாராயண சாஸ்திரியாராவார்.

இப்புரட்சியின் விளைவாக, சுவாமி வேதாசலம் (1876-1950) மறைமலை அடிகளாகவும் (வேதம்-மறை, அசலம்-மலை, சுவாமி-அடிகள்) சூரிய நாராயண சாஸ்திரியார்(1870-1903) பரிதிமாற் கலைஞராகவும் (சூரியன்-பரிதி, நாராயணன்-மால் சாஸ்திரி-கலைஞர்) பிரகாசித்தனர்.

பண்பாடு மொழி சார்ந்த இப்புரட்சிக்கு ஒருவகையில் தத்துவ போதகரும், வீரமாமுனிவரும் காரணகர்த்தாக்களாக இருந்தமையையிட்டு தமிழ்க் கத்தோலிக்க உலகம் பெருமை கொள்ள முடியும்.

வீரமாமுனிவரின் தமிழ்ப்புலமையின் வாரி சுகளாக ஈழத்தில் சுவாமி ஞானப்பிரகாசர், தனி நாயகம் அடிகளார், தாவீது அடிகளார் ஆகிய மூவரும் திகழ்ந்தபோதும் அவர்கள் இப்பண்பாட்டு மயமாக்கலில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. ஆனால், முத்தமிழ் அறிஞரென்று போற்றப்படும் விபுலானந்தஅடிகள், ஆங்கிலப்பெயர்கள் சிலவற்றைத் தமிழ்ப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ+ம். SHAKESPEARE_ செகசிற்பியர்) பண்பாட்டு மயமாக்கலில் ஈடுபட்ட மையை உலகம் அறியும்.

'பண்பாட்டு மயமாக்கலில்' இன்றும் ஓர் அம்சமாகவே தமிழில் நூல்களை அச்சிடும் பணியில் அன்றைய மேலைநாட்டுத் துறவிகள் ஈடுபட்டனர். இம் முயற்சியின் பயனாகவே கிறிஸ்து வேபதேசம் என்னும் முதல் தமிழ்நூல் கி.பி. 1577ல் வெளியாயிற்று என்பார் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார். (Tamil culture - Page-289. dated July 1958)

இவ்விதம், தமது ஒரே இலக்கை அடையும் வேட்கையோடு, நாளும் பொழுதும் அசுர வேகத்தில் உழைத்த அன்றைய கத்தோலிக்க கிறிஸ்தவ துறவிகளும், கவிஞர் பெருமக்களும் வானத்திற்குக் கீழே உள்ள அனைத்தும் மக்களுக்காகவே- இதில் எந்தச் சட்டமோ விதியோ குறுக்கிடக் கூடாது என்பதில் திடமாகவும் தெளிவாகவும் இருந்தனர்.

இந்த நிலைப்பாடு, இன்று உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் முன்னெடுக்கப்பட வேண்டியதொன்றாகும். அதுவும் உலகமயமாக்கல் எனும் 'டைனோசர்' இனங்களையும் அவற்றின் மொழி பண்பாடு எனும் கருவூலங்களையும் விழுங்கி ஏப்பமிடத் தருணம் பார்க்கும் இக்காலகட்டத்தில் பண்பாட்டு மயமாக்கல் ஓர் அவசரத்தேவை என்பதில் ஐயமே இல்லை.

எனவே "KHRISTOS" என்னும் கிரேக்கப் பெயர்ச்சொல் கிறிஸ்து என்றும் LORD JESUS, LORD DHRIST எனும் ஆங்கில அடையும் பெயரும் இயேசுநாதர், கிறிஸ்துநாதர் என்றும் தமிழ்ப்படுத்தப்பட்டது போல, BENE என்னும் இலத்தீன் சொல்லின் அடியாகப் பிறந்த BENEDICT எனும் ஆங்கிலப் பெயரைவிட, பல நூறு ஆண்டுகளாகத் தமிழ் மக்களுக்குப் பரிச்சயமான ஆசீர்வாதப்பர் எனும் பெயர் திருத் தந்தைக்குத் தக்கதும். மண்வாசனை தருவதுமாகும்.

இது, தத்துவபோதகர், வீரமாமுனிவருக்கு மட்டுமன்றி கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கும் நாம் காட்டும் நன்றி உணர்வாகவே காலம் வரலாற்றில் பதிந்து கொள்ளும்.

– வாகரைவாணன் –

## ஒளியாக ஒருவன்!

கொட்டிலது வீடு
கோவினங்கள் உறவு
கட்டிலது திண்ணை
கமகமக்கும் சாணம்
பட்டு அது கந்தல்
பஞ்சு அணை வைக்கோல்
இட்டமுடன் ஏற்று
யேசு அவர் பிறந்தார்!

வாடையது வருடும்
வசந்தமென எண்ணி
ஆடையில்லா மகவு
அக மெல்லாம் மகிழும்
கோடையது போலாம்
குளிர் காலம் என்று
ஓடையதன் பூப் போல்
ஒயிலாகச் சிரிப்பர்!

அந்த இருட் போதில்
அகல் தீபம் போல
விந்தை என ஒளிரும்
வியனுலகம் கேட்க
அந்தரத்தில் பெண்கள்
ஆராரோ இசைப்பார்
சிந்தைதனை அள்ளும்
சிரஞ்சீவிப் பாடல்!

ஒளி இந்தக் குழந்தை
உலகம் இதற்கென்று
விழி எல்லாம் நிறைய
வெள்ளி அது மேலே
பளீரெனச் சுடரும்
பார்த்தவர்கள் மூவர்
தெளிவடையலானார்
தேவன் அவன் அல்லோ!


அறிஞரவர் மூவர்
அரிய பொருள் தந்து
குறையின்றித் தொழுவார்
குழந்தையவர் உண்மை
இறை என்றே நெஞ்சில்
எழுதியவர் செல்வார்
பிறை போலும் பிள்ளை
பேரழகு கொஞ்சும்!

ஆயரவர் வருவார்
அறிவில்லா ரேனும்
தோய மண் வீழ்ந்து
தொழுது தான் பணிவார்
மாயம் இதில் இல்லை
மகிபன் இவர் என்றே
வாயும் மனம் இரண்டும்
வாழ்த்து மழை பொழியும்.!

வாகரைவாணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பிதாப்பிதாக்கள் வரிசையில் யாக்கோபு

இரட்சணிய வரலாற்றிலே ஆபிரகாமுக்கு அடுத்து ஈசாக் இருப்பினும், அவரைக் குறித்து வேதாகமத்தில் அதிகம் கூறப்படவில்லை. ஆபிரகாம் அவரைப் பலியிடமுனைந்தபோது இறைவன் அதனைத் தடுத்ததாகவும், பின்பு ஈசாக் றெபேக்காளை மணந்த தாகவும் இதன் வழியாய் இரட்டைக் குழந்தைகள் பிறந்ததாகவும் அதில் ஒருவர் யாக்கோப்பு எனவும் வரலாறு தொடர்கிறது. எனவே ஆபிரகாமுக்கு அடுத்ததாய் முக்கியத்துவம் பெறுபவர் யாக்கோப்பு

றெபேக்காவுக்கு ஈசாக்கின் மூலம் ஏசா, யாக்கோப்பு எனும் இரட்டைக் குழந்தைகள் பிறக் கின்றனர். தாய் வயிற்றில் இருக்கும் போதே இவர்கள் போர்புரியத் தொடாங்கி விட்டனர். இறைவன் ஒரு குடியை மற்றொரு குடி மேற்கொள்ளும் என்று கூறியதிற்கேற்ப யாக்கோப்பு பிறக்கும் போதே தன் சகோதரன் குதிகாலைப் பிடித்துக் கொண்டே பிறந்த தாக கூறப்படுகிறது. யாக்கோப்பு அழகானவனா கவும், மனப்பலம் நிறைந்தவனாகவும், தாயினால் அதிகமாய் நேசிக்கப்பட்ட மகனாகவும் காணப்பட்டான்.

ஒரு நாள் தான் தயார் செய்த உணவைத் தன் சகோதரனுக்குக் கொடுத்து தந்திரமாக மூத்த வனுக்குரிய தலைச்சன் உரிமையை அபகரித்துக் கொண்டான். ஏசா அற்ப உணவுக்காக ஆசைப்பட்டு தன் உரிமையை இழந்து விட்டான். இது போல் இன்றும் அற்ப ஆதாயத்திற்காக இறைவனின் அரிய கொடைகளை இழப்பவர்களையும் காண முடிகிறது. எனவே யாக்கோப்பு இறை அன்புக்குரியவனாய் இருப்பதாகக் காட்டுகிறார், ஆசிரியர். மேலும் ஏசா அன்னிய பெண்களை மணந்து கொண்டதாகவும், யாக்கோப்போ தந்தையின் சொற்படி தன் இனத்தில் பெண்கொண்டதாகவும் கூறப்படுகிறது. அத்துடன் தாயின் சூழ்ச்சியால் தந்தையின் ஆசீரையும் பெறுகிறார். எனவே இவ்வாறு சகோதரனின் பிறப்பு உரிமையினையும், தந்தையின் ஆசீரையும் பெறுகிறார். இவ்வாறு தந்தையின் ஆசீரையும் சூழ்ச்சியினால் பெற்றவருக்கு இறைவனின் ஆசீரும் அழைப்பும் கிடைக்கிறது.

தொ.நூ. 28:10. மொசப்பத்தோமியா நோக்கிச் செல்கையில், இரவானதும் களைப்பினால் ஒரு கல்லை எடுத்து தலைக்குக் கீழ் வைத்துப் படுத்துறங்கினார். அவ்வேளை அவர் ஓர் கனவு காண்கிறார். இவ்வேணிக் கனவின் வழியாய் இறை பராமரிப்பினை உணர்கிறார், ஆபிரகாமுடன் இறைவன் செய்து கொண்ட உடன்படிக்கையினை புதுப்பிக்கிறார். யாக்கோப்பின் வாழ்வில் இந்நிகழ்வு மிக முக்கியமானதாகும். இறைவன் தன் அருகில் இருப்பதை உணர்கிறார். ஆபிரகாமையும், ஈசாக் கையும் வழிநடத்திய இறைவன் தன்னையும் வழிநடத்துவதை உணர்கிறார். இறைவனுக்கும் தனக்குமுள்ள நெருங்கிய தொடர்பை அறிகிறார். நாம் எப்போதும் எவ்வேளையிலும் இறைவனுடன் உரையாடலாம் என்பதனை அறிகிறார். இவ்வாறு இக்கனவின் மூலம் பல உண்மைகளை விளங்கிக் கொள்கிறார்.

தன் சகோதரன் கோபம் தணியும் வரை மாமன் வீட்டில் இருந்தார். அங்கே அவருடைய இரு புதல்விகளையும் மணந்து கொள்கிறார். அவர்கள் மூலம் பதின்மூன்று பிள்ளைகளை பெற்றுக்கொள்கிறார். இந்நிகழ்வானது மொசப்பத்தேமிய பழக்க வாழக்கங் களைக் காட்டுகிறது. இஸ்ராயலர் இன்னும் ஒழுக்கத் தில் உயரவில்லை என்பதைக் காண முடிகிறது.


இதன் பின்பு தன் தாய் நாட்டிற்கு திரும்பி வருகிறார். அதற்கு முன்பு தன் தமையனின் கோபம் தணிந்து விட்டதினை அறிய பரிசுப் பொருட்களுடன் தூதர்களையும் அனுப்புகிறார். மேலும் அப்பயணத் தின் போது இன்னுமொரு நிகழ்வாக இனந்தெரியாத ஒருவருடன் போராடி வெற்றிபெற்றார். அவ்வேளை இஸ்ராயல்' எனும் புதிய பெயரினையும் பெற்றார். இச்சம்பவத்தின் போது இவர் மனிதருடன் நல்ல தொடர்பு கொள்வார் என்பதையும் இறைவனால் ஆசீர்வதிக்கப் பட்டவர் என்பதையும் விளக்குகிறார் ஆசிரியர். இவ்வாறு இரட்சணிய வரலாற்றில் யாக்கோப்பு முக்கியத்துவம் பெறுகிறார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ குறிப்பு



நீரிழிவைத் தடுக்கும் அந்த 2மணி நேரம்

**அக்குபங்சர் மருத்துவ சித்தாந்தத்தின்படி காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணிவரை மண்ணீரல் சுறுசுறுப்பாக இயங்கக் கூடிய நேரம்.**

குறிப்பிட்ட இந்த இரண்டு மணிநேரம் காலை, இரவு வேளைகளில் உணவருந்துவது தவிர்க்கப்பட்டால் உடலின் வெப்பநிலை அல்லது வெப்ப சக்தி ஓட்டம், உடல் உறுப்புக்கள் முழுவதும் சீராகச் சென்றடையும். இதனால் அனைத்து உறுப்புகளும் சீராக உறுப்புக்களின் இயக்கமும், பாதிப்பக்குள்ளாகாமல் பாதுகாக்கப் படும்.

எனவே, நீங்களும் உங்கள் குழந்தைகளும், காலை 8.00 மணிக்குள்ளாக காலை உணவையும் இரவு 8.00 மணிக்குள்ளாக இரவு உணவையும் சாப்பிட்டுவிடுங்கள். இதனால் பிற்காலத்தில் மண்ணீரல் பாதிப்பின் காரணமாக நீரிழிவு நோய் ஏற்படுவதையும், இரத்த அழுத்த நோய் ஏற்படுவதையும் தவிர்த்துக் கொள்ளலாம்

**நீங்கள் ஆரோக்கியமாக இருக்கின்றிர்களா? அப்படி என்றால்.**

1. மூன்று வேளைகளிலும் பசி சாதாரணமாக இருக்கவேண்டும்.
2. உணவு நன்கு சமிபாடாக வேண்டும்
3. தண்ணீர்த் தாகம் சாதாரணமாக இருக்க வேண்டும்
4. மலச்சிக்கல் இல்லாமல் இருக்க வேண்டும்.
5. வியர்வை சாதாரணமாக இருக்க வேண்டும்.
6. இரவில் ஆறிலிருந்து எட்டுமணி நேரத் தூக்கம் இருக்க வேண்டும்.
7. உடலில் வேறு உபாதைகள் (வலி, வீக்கம், எரிச்சல், அசதி, மயக்கம், அரிப்பு போன்றவைகள்) இல்லாமல் இருத்தல்.
8. சிறுநீர் கழித்தல் சாதாரணமாக இருத்தல் வேண்டும்

மேற்கூறிய எட்டு விதிமுறைகளில் எதில் வேறுபாடு மாற்றங்கள் ஏற்பட்டாலும் நோய் ஆரம்பமாகிறது என்று அர்த்தம். அந்த மாற்றங்கள் ஆறு மாதங்களுக்கு மேல் உடலிலிருந்து நீக்கப்படவில்லை என்றால் நாளை அது விதவிதமான பெயர்களைக் கொண்டு உங்களை நோயளியாக மாற்றி விடலாம். அத்துடன் மாதவிடாய்க் கோளாறுகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளுதலும் நல்ல உடல் நிலையைக் குறிக்கும்.

**தொகுப்பு. சித்தன்**




கீழ்த்திசையில் தோன்றும் ஒளிச்சுடரே. எங்கள்
தேவமகன் பிறந்த சேதி சொல்லு- அவன்
தாழ்பணிந்தோம் மந்தைத் தொழுவம் தன்னில்- எமை
பாவங்களில் நின்று மீட்கச் சொல்லு

மேரியன்னை தந்தை சூசையுடன்
பாரிலே பாலகனாய்ப் பிறந்தவனே.
நேரிய விண்ணரசு ஆளவந்த -எங்கள்
நேசனே உன்வருகை ஆனந்தமே

அன்றந்த ஞானிகளின் வருகை கண்டு
நின்றதே விண்மீனும் திசைகள் கண்டு
சென்றவர் துதித்தனரே பக்தி கொண்டு - மன்னன்
நின்றானே ஏரோது கலங்கி அன்று

காலத்தை வென்றவனே கண்மணியே
ஞாலத்தின் ஒளிச்சுடரே ஆரிராரோ - திருக்
கோலத்தில் தீவனத்தில் தூங்கும் எங்கள்
இயேசுபாலகனே ஆரிராரோ

**F. திலீபன்**
தரம் 11A
மட்/ புனித மிக்கேல் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறையற்ற தொடர்பாடலும் கற்றல் கட்டுமானமும்

அ. இருதயநாதன் *M.A. mphil. (U.K)*

தொடர்பாடல் என்பது "வெளிப்படுத்துதலும் பெற்றுக் கொள்ளுதலும்" எனமுன்னர் பார்த்தோம். இன்று இவ்விரு கூறுகளும் எவ்வாறு எம்வாழ்வில் அனுபவமாக உள்ளது என்பதைச் சற்று ஆழமாக நோக்குவோம். தொடர்பாடல் என்பது மானிட வாழ்வியல் நடத்தை என்பதனால் நாம், எமது குடும்பம், அயல், உறவினர், நண்பன், நண்பிகள். எம்முடன் தொடர்புபட்டவர்கள், முன்மாதிரியாக நாம் ஏற்றுக் கொண்டவர்கள் அல்லது தேர்ந்து கொண்டவர்கள், எமது வாழ்விடச் சமூகம் இப்படிப் பல்வேறு புறக்காரணிகளிடம் இருந்தே வெளிப்படுத்து தலையும் பெற்றுக் கொள்ளுதலையும் நாம் பிறந்ததில் இருந்து இன்றுவரை கற்று வருகின்றோம்.

எமது உணர்வுகள், தேவைகள், வேண்டுகோள்கள், விரும்புபவை, விரும்பாதவை, சிந்தனைகள், எண்ணங்கள், அபிலாசைகள் இப்படி ஏராளமானவற்றை இன்று நாம் வெளிப்படுத்தும் முறையானது எமக்கு வெளியில் இருந்து நாம் கற்றுக் கொண்டதும் அபிவிருத்தி செய்து கொண்டதுமான பண்பியல்புகழுக்கூடாக என்றால் மிகையில்லை இவ்வாறு கற்றவற்றுக் கூடாக மாத்திரம் நாம் அப்படியே தொடர்பாடலில் வெளிப் படுத்துவதுமில்லை; வெளிப்படுத்துபவைகளைப் பெற்றுக் கொள்வதுமில்லை. எமது சுய ஆளுமைப் பண்பியல்புகளும், தனிமனித பிரத்தியேகங்களும் இணைந்தே எமது வெளிப் படுத்துதலை அல்லது பெற்றுக் கொள்ளுதலை மெருகூட்டுகின்றன அல்லது குறிப்பிட்டளவு தீர்மானிக்கின்றன.



தொடர்பாடலில் "வெளிப்படுத்தல் பெற்றுக் கொள்ளுதல்" எனும் இரு கூறுகளும் நாம் பிறரிடம் இருந்து கற்றுக் கொண்டவையும் அவற்றுக்கூடாக எமக்குள் மெருகூட்டி எடுத்துக் கொண்டவையும் எனப் பார்த்த நாம், இன்று நாம் எவ்வாறு பிறரிடம் இருந்து தொடர்பாடலில் உணர்வுகளை, கருத்துக்களை, அபிப்பிராயங்களை, எண்ணங்களை, பிரதிபலங்களை... வெளிப் படுத்துதலைப் பெற்றுக்கொள்கிறோம் எனப் பார்ப்போம். எப்போதுமே நாம் ஐம்புலன்களைப் பயன்படுத்தியே (பார்வை/ பார்த்தல், கேட்டல், உணர்தல், முகர்தல், சுவைத்தல்) எமக்கு உள்ளும் வெளியிலும் கிடைக்கும் தொடர்பாடல்களின் செய்திகளைப் பெற்றுக் கொள்கிறோம். இவ்வாறு எமது ஐம்புலன்களுக்கு கிடைப்பவற்றை மாத்திரம் வைத்துக் கொண்டு தொடர் பாடி உறவாட நாம் முயல்வதில்லை. மாறாக எமது ஐம்புலனுக்குக் கிடைப்பவற்றை எமது மூளைக்கு அனுப்பி பகுப்பாய்வு செய்து பகுப்பாய்வை வைத்துக்கொண்டு ஒரு தீர்ப்பினை வழங்கி, எமது வெளிப்படுத்தலை மேற்கொள்கிறோம். இத்தகைய அகப் பகுப்பாய்வுக்கு நான்கு சோடி அளவு கோல்களைப் பயன்படுத்துகின்றோம்.

நல்லது - கெட்டது (Good-bad) சரி- பிழை (Right_ wrong) பொருத்தம் - பொருத்தமில்லை (Appropriate - inappropriate) ~~நெறிநடத்தையியலுக்குப்பட்டது~~- நெறிநடத்தை யியலுக்கு எதிரானது (moral - Immorl).

உதாரணமாக நீங்கள் வீதியால் செல்கிறீர்கள். ஒரு சிறுவன் கல் ஒன்றை எடுத்து நாயை நோக்கி எறிகின்றான். அந்நாய் குரைத்துக் கொண்டே துரத்துகிறது. அலறியடித்துக் கொண்டு அப் பையன் ஓடுகிறான். இதனைப் பார்க்கும் நீங்கள் அக்காட்சியை வெறும் பார்வையாக அல்லது அவதானிப்பாக மாத்திரம் பெற்றுக் கொள்வதில்லை. மாறாக மூளையில் பகுப்பாய்வு மையத்திற்கு அவற்றை அனுப்பி நான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோடி அளவு கோல்களில் ஏதோ ஒன்றை வைத்து அச்சம்பவம் பற்றிய கணிப்பீடு செய்து அல்லது பகுப்பாய்வு செய்து ஒரு தீர்ப்பிடுதலை மேற் கொள்கின்றீர்கள். இத் தீர்ப்பினையே நாம் தொடர் பாடலுக்கூடாக வெளியே கொணர்கின்றோம். உதாரணமாக: 'நீ என்ன மடத்தனமான வேலை பார்த்தாய். அதனால் தான் நாய் உன்னைத் துரத்துகிறது' எனச் சிறுவனைப் பார்துக் கூறலாம். அல்லது இன்னுமொருவரிடம் இவனுக்கு இதுபோதாது இன்னும் வேண்டும் எனக் கூறலாம். அல்லது ஐயோ பாவம் இந்தச் சிறுவனைக் காப்பாற்ற எவரும் இல்லையா எனக் கூக்குரலிடலாம். இப்படி ஏராளமான வெளிப்படுத்துதல்கள் இங்கு வெளிப்பட சாத்தியம் உள்ளது. ஒருவர் நான்கு சோடி அளவு கோல்களில் எதனைப் பயன்படுத்தி ஒரு தீர்ப்புக்கு வருகிறார் என்பதைப் பொறுத்தே அவரின் வெளிப்படுத்து தலின் தொனி அமைகிறது. இப்படி தன்னியக்கமாகி எங்களை அறியாமலே எமக்குள் இடம் பெறுகிறது. இதற்குக் காரணம் நாம் கற்றுக் கொண்ட முறையும், எமது அகக் கட்டுமானப் படி முறையுமாகும்.

எமது ஐம்புலனுக்குக் கிடைப்பதை நாம் அப்படியே பெற்றுக் கொள்ளாமல் அல்லது பெற்றுக் கொண்டு அதற்குச் சாதாரண எதிர் வினை யை அல்லது பிரதிபலிப்பைக் காட்டாமல் ஐம்புலனுக்குக் கிடைத்தவற்றை பகுப்பாய்வுக் குட்படுத்தி அதன் பேறாக நாம் கொடுக்கும் தீர்ப்பை நாம் வெளிப்படுத்துதலாக மேற்கொள்ள முயல்வதே எமது தொடர்பாடலில் நடக்கிறது. இதனை விளங்கிக் கொள்ள சில உதரணங்களைப் பார்ப்போம். நீங்கள் ஓர் அலுவலகத்தில் பணிபுரிகிறீர்கள். ஒருநாள் உங்கள் மேலதிகாரி எரிந்துவிழுவதையும் ஒரு சிலர் மீது சத்தம் போடுவதையும் பார்க்கிறீர்கள். இதுவே உங்கள் ஐம்புலனுக்குக் கிடைக்கிறது. அவ்வேளை உங்கள் சகபணியாளர் ஒருவர் இது எதனையும் அறியாமல் உங்களிடம் வந்து மேலதிகாரியைச் சந்திக்க விரும்புவதைத் தனது பேச்சுக்கிடையே கூறுகிறார் "நீங்களோ கவனம், இப்போது ஆள் கொஞ்சம் சூடாக இருக்கிறார்" என்கிறீர்கள். உங்கள் சகபணியாளரோ இதனைக் கேட்டுக் கலரமடைந்து பின்வாங்கி விடுகிறார். இங்கு மேலதிகாரியிடம் நீங்கள் கண்டவற்றை அப்படியே சக பணியாளரிடம் கூறவில்லை, உங்கள் தீர்ப்பினையே கூறினீர்கள். கண்டவற்றைப் பகுத்தாய்ந்து நீங்கள் இறுதியில் எடுத்த முடிவினையே வெளிப்படுத்தினீர்கள். இதனால் உங்களுடனான தொடர்பாடலினூடாக உங்கள் சகபணியாளர் உண்மை நிலையை விளங்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது.

இன்னுமாரு உதாரணத்தை எடுப்போம். ஒரு தந்தை தனது மகன் நேரத்துக்குத் தானாகவே எழுந்து தனது காலைக்கடன்களை முடித்து சுயமாக ஆயத்தமாகி பாடசலைக்குச் செல்வதைப் பார்க்க விரும்புகிறர். மகனோ தினமும் பிறரால் தூண்டப்பட்டு, கட்டாயப்படுத்தப்பட்டு பலாத்காரத்தின் அடிப் படையில் செயல்படுகின்றான். வேண்டா வெறுப்பாக அரை மனதுடன் வீட்டாரின் வற்புறுத்தலினால் தனது கடமைகளைச் செய்கிறான். படிப்பில் அதிகம் கவனம், ஈடுபாடு செலுத்துவதில்லை. இதனை அவதானித்துவரும் தந்தை, மகனிடம் ஒரு நாள் நேரடியாகவே பேச எண்ணி தனது ஆதங்கத்தை இப்படிக் கூறுகின்றார்; "நீ வர வர பொறுப்பில்லாமல் ஊதாரியா மாறிவருகிறாய். உன்னால் வீட்டில் எல்லாருக்கும் தலையிடியாக இருக்கிறது. நீ இப்போது திருந்தாவிட்டால் கெட்டு நாசமாய் போகப்போகிறய்". மகனோ தந்தையிடம் "ஒரே நீங்க இப்படித்தான், என்னில குற்றம் கண்டு பிடிக்கிறதே வேலயாகப்போயிற்று" என எதிர்த்துக் கூறுகின்றான். இங்கு தந்தை தான் கண்டதை, கேட்டதை அல்லது உணர்ந்ததையா கூறினார்? கண்பார்வைக் கூடாகவும், கேட்டவற்றுக்கூடாகவும் தான் ஏற்படுத்திக் கொண்ட தீர்ப்பினைத்தான் கூறினார். தனது ஐம்புலனுக்குக் கிடைத்ததை அப்படியே மகனிடம் கூறவில்லை. இதனால் மகனும் தந்தை கூறியதை "தாக்குதலாக, மறை விமர்சனமாக, குற்றம் சுமத்துதலாக" பெற்றுக்கொண்டு தனது பதில் தாக்குதலைத் தொடுத்துள்ளான். அவனும் தந்தை மீதான தனது கணிப்பீட்டை / மீளாய்வை "ஒரே" என்ற வார்த்தைக்கூடாக "தற்காப்பு வெளிப்படுத்துதலை" மேற்கொண்டுள்ளான். தந்தை கூறியதை அவனால் பெற்றுத்துக்கொள்ள முடியவில்லை. எனவே தந்தை தனது வெளிப் படுத்துதலில் தோற்றுவிட்டார். இதற்குக் காரணம் தான் மகனிடம் அவதானித்ததை வெறும் அவதானிப்பாக வெளிப்படுத்தி அதற்கூடாக தனது உணர்வலைகளையும், தான் மகனிடம் விரும்பு வதையும், எதிர்பார்ப்பதையும் வெளிப்படுத்தாது தனது பகுப்பாய்வு மனதின் முடிவுகள், தீர்ப்புக்க ளுக்கூடாக தன்னை வெளிப்படுத்தியதே ஆகும். மகனும் தந்தையின் செய்தியையோ உணர்வுக ளையோ அதற்குப் பின்னல் இருந்த அவரது அக்கறை, கரிசனையையோ பெற்றுக் கொள்ள வில்லை. மாறாக தாக்கதலாகவே பெற்றுக் கொண்டுள்ளான். இங்கு இதய இணைவு பற்றி பேசவே இடமில்லை. தொடர்பாடல் இடம்பெற வாய்ப்பே இல்லாமல் போய் விட்டது. எனவே இன்று தொடர் பாடலில் நாம் மீள் கற்றலுக்கு அல்லது மீள்கட்டுமானத்துக்கு உட்பட வேண்டி உள்ளது. ஏனையவற்றை அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறோம்! வேண்டுகிறோம்!!



டிசம்பர் மாதம் ஒன்பதாம் திகதி தமது பிறந்த நாளையும், அதேமாதம் இருபதாம் திகதி தமது குருத்துவ வாழ்வின் 44வது ஆண்டு நிறைவையும் கொண்டாடிய திரு/மட். மறைமாவட்ட ஆயர் பேரருள் தந்தை யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களுக்கு தொண்டன் தனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆன்ம, உடல் ஆரோக்கியத்துக்காக இறை வனை இறைஞ்சுகிறது.

## இலங்கையில் நூற்றாண்டு கண்டுள்ள புனித வின்சன்ற் டிபோல் சபை

வறியவர்கள், வலது குறைந்தவர்கள், மற்றும் பல்வேறு வகையிலும் பாதிப்புற்ற மக்களுக்கெல்லாம் அரும்பணி யாற்றி வரும் புனித வின்சன்ற் டி போல் சபை இலங்கையில் ஆரம்பிக் கப்பட்டு நூறு ஆண்டுகளை நிறைவு செய்யுதுள்ளது.

1வது ஆலோசனைச் சபை வடபகுதியில் யாழ் மண்ணில் ஆரம்பிக்கப் பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. இலங்கையின் வின்சற் டிபோல் சபை வரலாற்றில் முதன் முதலாக தேசியத் தலைவராக தமிழரொருவர் - மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. A.A.G. இராஜேந்திரம் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். திருகோணமலை மட்டக்களப்பு மறை மாவட்டத்தில் புனித வின்சன்ற் டிபோல் சபையின் வளர்ச்சிக்கு நீண்ட காலமாக பெரிதும் பங்களித்துள்ள இவருக்கு மறை மாவட்டத்தின் சார்பில் எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

## திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்துக்கு புதிய குருக்கள் நால்வர்

மட்டக்களப்பு தன்னாமுனையைச் சேர்ந்த சகோ. ஜெயகாந்தன், இருதயபுரத்தைச் சேர்ந்த சகோ. ஜெய நிக்சன், திருகோணமலை பாலையூற்றைச் சேர்ந்த சகோ. டக்லஸ் ஜேம்ஸ் ஆகியோர் மறை மாவட்ட ஆயர் பேரருள்திரு யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவாகளால் குருக்களாக திருநிலைப்படுத்தப் பட்டுள்ளனர்.

டிசம்பர் ஐந்தாம் திகதி மட்டக்களப்பு புனித மரியன்னை இணைப்பேராலயத்திலும், டிசம்பர் பன்னிரண்டாம் திகதி திருகோண மலை புனித மரியன்னை பேராலயத்திலும் புதிய குருக்களைத் திருநிலைப்படுத்தும் சடங்குகள் நடைபெற்றன. இறைபணிக்காக தம்மை அர்ப்பணித்துள்ள புதிய குருக்களை வாழ்த்துவதோடு இவர்கள் பணிவாழ்வு சிறக்க இறை அருள் இறைஞ்சுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





R. ஸ்ரான்லி பிரபாகரன்

## மனிதனும் உணர்வுகளும்

**பயம் -**

மனிதனது பிறப்புத் தொடக்கம் இறப்பு வரை பயம் என்கின்ற உணர்வு அவனை ஆட்டிப்படைக் கின்றது. கருவறையில் தாயின் உணர்வுகளுடன் தொடர்பு கொண்டுள்ள குழந்தையானது அது வெளிவரும் வரை உலகின் காட்சிகளையும் மனித உருவங்களையும் கண்டு பயந்து குழந்தை அழுகின்றது என்பர். அதே போலவே மனிதனை மரண பயம் ஆட்கொள்ளுகின்ற இறுதி கட்டங்க ளிலும் அவன் பயம் எனும் உணர்வினால் சூழப் படுகின்றான். அது மாத் திரமல்லாமல் நாளுக்கு நாள் எமக்குக் கிடைக்கப் பெறுகின்ற வாழ்க்கை அனு பவங்களில் பயம் என்ற உணர்வு நிரம்பிக் கிடக்கின்றது. எனவே, இது தொடர்பாக நாம் விழிப்பாக இல்லாது விட்டால் எமது உள நல வாழ்வு குன்றும்.



பயம் என்கிற உணர்வு பல்வேறு தன்மைகளை உடையது. அது பல் வேறு காரணிகளால் தோன்றுகின்றது என்று கூடக் கூறலாம். நிகழ்வுகள் அல்லது சம்பவங்கள் பய உணர்வை ஏற்படுத்தலாம்; கருத்தியல் சார் விடயங்கள் பய உணர்வை ஏற்படுத்தலாம்; நிகழ்வுகள் மனதில் பதிவதனால் அதன் விளைவாக மேலும் சிந்திப்பதனால் பய உணர்வு ஏற்படலாம். எனவே, இந்த மூன்று அம்சங்களையும் விளங்கிக்கொள்ள பின்வரும் மூன்று கதைகளைப் பார்ப்போம். (இக் கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் கற்பனைப் பெயர்களே)

**கதை - 1**

14 வயதுடைய காந்தனின் வீடு கடற்கரையிலிருந்து மிக அண்மையிலேயே அமைந்திருந்தது. அவன் அன்று தனது வீட்டு முற்றத்திலே தனது நண்பர்கள் நால்வருடன் விளையாடிக் கொண்டிருந்தான். அவர்களது விளையாட்டு ஆரவாரத்தில் அக்கிராமத்தவர் பலரும் கத்திய சத்தம் அவர்களின் காதுகளில் சரிவர விளங்கவில்லை. ஆனால், விளை யாட்டின் இடையில் மக்களின் ஓசையைக் காந்தன் கேட்டு விட்டான். தப்பி ஓடும்படியான அந்த ஓசைகளின் அர்த்தத்தை நின்று நிதானி ப்பதற்கு முன்னர் கண்களை இமைகளை மீறி வெளியே கொண்டு வரும்படியான பயங்கரக் காட்சியை அவன் கண்டான். கண்முன்னே அப்பொழுதுதான் தென்பட்ட அவனது வீட்டை விழுங்கிக் கொண்டு வந்த அந்தக் கரிய பேரலை அவன் நெஞ்சைக் கருக்கியது. விறைத்து நின்ற அவனைச் சுருட்டி எடுத்த அந்த இராட்சச அலை பட்டதுமே அவனுக்கு உலகம் இருண்டு விட்டது. அந்த அலை அவனைச் சுருட்டி நிலத்தில் ஒருதடவை குத்தியது. பின்னர் காந்தன் தான் நீரின் மேற்பரப்பில் மிதப்பதை உணர்ந்தான். அடித்துச் செல்லப்படும்போது உயர்ந்து வளர்ந்த தென்னை மரத்தைத் தாவி ஏறிக் கொண்டான். அலையில் அடித்துச் செல்லப்படும் குழந்தைகள், பெண்கள் என்போரின் பரிதாப நிலையைக் காணும் வேதனை ஒரு புறம், நெற்றியில் பிய்ந்து தொங்கும் காயத்தின் வேதனை ஒரு பக்கம்....

இந்தச் சம்பவம் நடந்து 6 மாதங் களுக்குப் பின்னர் ஒருநாள் காந்தன் படித்துக் கொண்டிருந்தான். சற்றுத் தொலைவில் பலர் கத்தும் சத்தம் கேட்டது. புத்தகத்தில் இருந்து கண்களை விலக்கி, விரிந்த கண்களுடன் ஓசையின் பக்கம் செவி கொடுத்துப் பயந்தும் விட்டான்.

**கதை - 2**

கிராமத்துக் காற்று அந்த மர நிழலில் வீசிக் கொண்டிருந்தது. காய்ந்த கட்டையின் மீது இரண்டு நடுத்தர வயதுடையோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் இருவரும் பேசுவதைத் தெளிவாகக் கேட்கக் கூடிய தொலைவில் தனியே அமர்ந் திருந்து மணல் விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தாள் சிறுமி ராணி. நடுத்தர வயதினர் இருவரும் உரையாடலை ஆரம்பித்தனர்.

**ஒருவர்:** அந்தா தெரியுற மரத்துக் குக் கீழ இரவையில நெருப்புத் தெரியும். பகலைல போய்ப் பார்த்தா ஒரு அடையாளமும் இருக்காது. இரவையில அந்த மரத்துக்குக் கீழ போய்ப் பார்த்தா அவ்வளவுதான் அந்த ஆள் செத்துப் போயிரும்.

**மற்றவர்:** இரவையில என்ன! பகலையிலையும் தான். சரியாப் பகல் 12 மணிக்கு அந்த மரத்துக்குக் கீழ போகக் சுடாது எண்டு சொல்லுவாங்க. அந்த மரத்தப் பார்க்கவே பயமா இருக்குது. அடர்ந்து, உயரமாக வளர்ந்திருக்குது.

**ஒருவர்:** மனிசர் நமக்கு வீடுகள் இருக்குது. இந்தப் பேய்கள் இப்பிடி பயங்கரமாக வளர்ந்திருக்கின்ற மரங்களிலதானே குடிகொள்ளும்.

**மற்றவர்:** மனிசரிட ரெத்தமெண்டால் பேய்களுக்கு விருப்பம் தானே. நடுச்சாமமும், நடுப்பகலும் அதுகளிட நேரம்தானே. அந்த நேரத்தில போனா அவ்வளவுதான்.

**ஒருவர்:** சரி கதைய விடுவம். இப்ப நல்லா வெயில் எரிக்குது. 12 மணி இருக்கும். எழும்பு போவம். விளையாட்டோடு இருந்த சிறுமி அதைவிட்டு உரையாடலை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டி ருந்தாள். தான் அமர்ந்திருந்த மரத்தை சற்று ஏறெடுத்துப் பார்த்தாள். மேலே மரக்கிளைகள் அடர்ந்து இருண்டிருந்தது. தனியே இருப்பதையும் உணர்ந்தாள். கணப்பொழுதும் அவ்விடத்திலே தாமதிக்கவில்லை. வேகமாக ஓடிச் சென்று சமையலில் அக்கறை காட்டிக் கொண்டு இருந்த தாயின் அருகே எதுவும் பேசாமல் பயந்து நின்றால்.

**கதை - 3**

26 வயது நிரம்பிய மாலாவுக்கு திருமணப் பேச்சு நடைபெற்றுக்கொண்டிருந்தது. "மாப்பிள்ளை ஆம்பிளைச் சிங்கம் தான்" என்ற விடயம்தான் அடிக்கடி மாலாவின் காதில் அடிபட்டது. இது அவளது பழைய அனுபவங்களைச் சிந்திக்கத் தூண்டியது. பருவம் அடைந்த வயதில் அவள் பார்ப்பதற்கு அழகாக இருந்தாள். யாரும் இல்லாத நேரம் தற்செயலாக வீட்டுக்கு வந்த அயலவர் ஒருவர் அவளை கையைப் பிடித்து இழுத்து வலிமையாகக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்த அந்த அனுபவத்தை இன்றும் அவள் அருவருப்பாகவே நினைக்கின்றாள்.

இன்னுமொரு முறை பக்கத்து ஊரிலுள்ள சித்தியின் வீட்டுக்குச் சென்றிருந்தாள். அங்கே அவளுடைய சித்தப்பா சித்தியை கொடூரமாக அடிப்பதைக் கண்டாள்.

இவ்வாறாக பல ஆண்கள் தனது வாழ்வைப் பாதித்ததை எண்ணிக் கொண்டே இருந்த மாலா திருமணப் பேச்சுத் தொடங்கிய காலத்தில் இருந்து வேறுபட்ட நடத்தை உடைய வளாகவே இருந்தாள். ஒரு புதிய ஆணோடு தான் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளவேண்டி ஏற்பட்டு விடுமோ என்கின்ற அச்சத்தினால் ஆட்கொள்ளப்பட்டிருந்தாள்.

மேற்சொன்ன மூன்று கதைகளும் பயத்திற்கான மூன்று விதமான காரணங்களைக் காட்டி நிற்கின்றன. முதலாவது கதையில் ஒரு கொடூரமான அனுபவமே பயத்துக்குக் காரணமாக அமை கிறது. அந்தப் பயங்கர அனுபவம் அதையொத்த அறிகுறியை இன்னுமொரு சந்தர்ப்பத்தில் தோற்றுவிக் கின்ற போது பயம் மேலிடுகின்றது.

இரண்டாவது கதையை எடுத்துக் கொண்டால் அச்சிறுமிக்கு புதியவிதமான கருத்தொன்று அறிமுகமாகின்றது. அந்த இரண்டு நடுத்தர வயதுடையோரது "பேய்கள் பற்றிய கருத்து" சிறுமிக்கு கடத்தப்படுகிறது. அன்றிலிருந்து அவளிடமும் ஒருகருத்து தோன்று கின்றது. இதுவே பயத்துக்குக் காரணமாக அமைகிறது.

மூன்றாவது கதையில் மாலா பெற்ற அனுபவங்கள் ஆண்கள் பற்றிய ஒரு கருத்தை உருவாக்குகின்றது. பேசப்படும் ஆண் நல்லவரா கெட்டவரா என்ற உண்மை தெரியாமலேயே அவள் தனது அனுபவத்தின் அடிப் படையில் ஆண்களைக் குறித்துப் பயம் கொள்கிறாள். இங்கே அனுபவத்தின் ஊடாக உரு வாகிய கருத்தொன்று பயத்துக் கான காரணமாக அமைகின்றது.

எனவே, நாமும் எம்மைச் சோதித்துப் பார்ப்போம். எம்மை ஆட்கொண்டிருக்கின்ற பயத்துக் கான காரணிகள் என்ன? என்பதை அறிந்து கொள்வோம். எம்மைப் பற்றி நாம் அறிந்து கொள்வதே மனநலத்துக்கு மிகவும் முக்கியமான தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
30 - 01 - 2006




# விவிலியம் கற்போம் - 44

**(விடுதலைப் பயணம் 19: 1–13)**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

எகிப்து நாட்டினின்று புறப்பட்டு வந்த மூன்றாம் மாதம் முதல்நாளில் இஸ்ரயேல் மக்கள் சீனாய் பாலை நிலைத்தைச் சென்றடைந்தனர். .......................... இலிருந்து பயணம் மேற்கொண்ட அவர்கள் பாலை நிலைத்தில் பாளையம் இறங்கினர். ஆனால் மோசே கடவுளிடம் ஏறிச்சென்றார். அப்போது ஆண்டவர் மலையினின்று அவரை அழைத்து.......................... குடும்பத்தார்க்கு நீ சொல்லவேண்டியது இதுவே, நான் எகிப்துக்குச் செய்ததையும், கழுகுகளின் இறக்கைகளின் மேல் உங்களை ஏந்தி என்னிடம் வந்து சேரச்செய்ததையும் நீங்களே கண்டீர்கள். நீங்கள் என் .......................... க்குச் செவிசாய்த்து என் உடன்படிக்கையைக் கடைப்பிடித்தால் அனைத்துலகும் என் உடைமையெனினும், நீங்களே எல்லா மக்கள் இனங்களிலும் என்தனி .........................., மேலும், எனக்கு நீங்கள் குருத்துவ அரசாகவும், தூய மக்களினமாகவும் இருப்பீர்கள். இவ்வார்த்தைகளே நீ கூறவேண்டியவை' என்றார் .......................... வந்து, மக்களின் தலைவர்களை வரவழைத்து, ஆண்டவர் கட்டளையிட்ட அனைத்தையும் அவர்களுக்கு எடுத்துரைத்தார். மக்கள் அனைவரும் ஒரே குரலாக. '.......................... கூறியபடியே அனைத்தும் செய்வோம்' என்று மறுமொழி கூறினர். மக்களின் பதிலை மோசே ஆண்டவரிடம் சமர்ப்பித்தார். ஆண்டவர் மோசேயை நோக்கி 'இதோ, நான் .......................... பேசுவதை மக்கள் கேட்கும்படியும் உன்னை நம்பும்படியும் நான் கார்மேகத்தில் உன்னிடம் வருவேன்' என்றார். மோசே மக்களின் வார்த்தைகளை ஆண்டவருக்கு அறிவித்தார். ஆண்டவர் மோசேயிடம் "நீ .......................... போய் அவர்களை இன்றும் நாளையும் தூய்மைப்படுத்து. அவர்கள் மூன்றாம் நாளுக்காகத் தயாராகட்டும். மூன்றாம் நாள் ஆண்டவர் .......................... மேல் இறங்கிவருவார். மலையைச் சுற்றிலும் எல்லைகளைத் தீர்மானித்துக்கொடு. எவரும் மலைமேல் ஏறாதபடியும், அதன் அடிவாரத்தைத் தொடாதபடியும் எச்சரிக்கையாயிருங்கள். மலையைத் தொடுபவர் யாரானாலும் .......................... உறுதி, அத்தகையவரை யாரும் கையால் தொடாமல், கல்லால் எறிந்தோ, அம்பால் எய்தோ கொல்லவேண்டும். அப்படிப்பட்ட கால் நடையோ, மனிதரோ சாகவேண்டும் என்று அவர்களுக்குச் சொல். எக்காளம் முழங்குகையில் குறிப்பிட்டவர்கள் மலைமேல் ஏறிவரட்டும். என்றார்.

**விடைகள். ஆண்டவர், கொல்லப்படுவது, சீனாய்மலை, இரபிதீம், மக்களிடம், யாக்கோபின், வார்த்தை, மோசே, சொத்தாவீர்கள், உன்னோடு**

*(இவ்வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவுவை வளர்ப்போம்– 44

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

!) இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி வரிசையில் தற்போது தெரிவு செய்யப்பட்டிருப்பவர்.
(6வது / 4வது / 5வது)

2) இராமாயணத்தில் செய் நன்றிக்காக உயிர்கொடுத்த வீரன்
(ஜடாயு / கும்பகர்ணன் / இந்திரஜித்)

3) அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற இந்திய, இலங்கை அணிகளுக்கான ஒரு நாள் கிரிக்கட் போட்டித் தொடரின் ஸ்கோர் விபரம்.
(4க்கு 1 / 3க்கு 2 / 2க்கு 3)

4) ஊசிகளை மட்டும் பாவித்து வைத்தியம் செய்யப்படும் மருத்துவம்.
(அலோபதி / ஹோமியோபதி / அக்குபங்சர்)

5) சாது மிரண்டால் ........................?
(நாடு கொள்ளாது / காடு கொள்ளாது / வீட்டில் நில்லாது)

6) கரும்பிலிருந்து பெறப்படும் சர்க்கரையை இவ்வாறு அழைப்பர்
( சுக்ரோஸ் / குளுக்கோஸ் / கேலக்டோஸ்)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**

**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 44**

**தொண்டன்**

**அ.பெ. எண் 44**

**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 42 விடைகள்

இரபதிம், கொடும், எகிப்திலிருந்து, கதறினார், மாசா, யோசுவாவை, கோலை, ஆரோன், வெற்றியடைந்தனர். அமலேக்கியரை.

## அறிவை வளர்ப்போம் - 42 விடைகள்

1) ஆறு ஆண்டுகள்
2) கொல்வின் ஆர்டி சில்வா.
3) ஜேர்மனி
4) கண்ணன்
5) க்ஷேன் வோன்
6) பூ மலர்ந்தது.

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை அளித்து இசைநாடா பரிசு பெறுவோர்.**

- செ. ஜகுடித் ஜொய்சி
  15, சரவண வீதி
  கல்லடி, மட்டக்களப்பு.
- கை. டானியா
  8/21 A செல்வநாயகம் வீதி
  1ம் குறுக்கு, மட்டக்களப்பு

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை அளித்து இசைநாடா பரிசு பெறுவோர்.**

- ல. இயூஜின் றிக்ஷாந்
  103/1 லேடி மெனிங் றைவ்
  மட்டக்களப்பு.
- லோ. பிரபு
  6/134 ய கோயில் வீதி
  சொறிக்கல்முனை.

**பாராட்டுப் பெறுவோர்**

- த. தீபராஜ்
  189/B புதுவளவு
  சொறிக்கல் முனை.
- அமிற்றா பாத்லட்
  78, சின்ன உப்போடை
  மட்டக்களப்பு.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி.** (ஆ – ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka

# காற்றில் கலந்துவரும்....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்
## ஜனவரி ~ பெப்ரவரி 2006

**கத்தோலிக்க நற்சிந்தனைகள் - காலை 5.50 மணி**

நாள் : 21, 22, 23, 24, 25, 26, 27
பெப்ரவரி: 04, 05, 06, 07, 08, 09, 10
18, 19, 20, 21, 22, 23, 24

**புதிய உலகம்** (வளர்ந்தோர் நிகழ்ச்சி) - **மாலை 6.30 மணி**

நாள் : 15, 29
பெப்ரவரி: 12, 26

**சிறுவர் உலகம** (சிறுவர் நிகழ்ச்சி) - **மாலை 6.30 மணி**

நாள் : 17, 31
பெப்ரவரி: 14, 28

நிகழ்ச்சித் தொகுப்பு : *மலர்வேந்தன்*

தொகுப்பு : சமூகத்தொடர்பு நிலையம்
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org